# யாழ்நாதம்

இதழ் 14

௨௦௦௮



வெளியீடு

'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச மகளிர் தினம் 2007-03-08 அன்று திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்களை கௌரவித்த நிகழ்வின் நிழல்கள் (குறிப்பு – பக்கங்கள் 5-8)






யாழ் நாதம் இதழ் 13 வெளியீடு (குறிப்பு – பக்கம் 7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு:- 'யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு

# யாழ் நாதம்

இதழ் 14 2008

உள்ளே: . . . . . .

கல்லூரிக் கீதம். . . 02
செய்நன்றி. . . 03
எமது வருடாந்த மலர். . . 04
சர்வதேச மகளிர் தின நிகழ்வு. . . 05
திருமதி சிவகாமி அம்பலவாணரின் தலைமை உரை. . . 09
பிரதம அதிதி புரவலர் ஹஷிம் உமார் வழங்கிய பெயர்க்கல். . . 12
பிரதம அதிதி புரவலர் ஹஷிம் உமார் உரை. . . 13
திருமதி தயாநிதி செல்வநாயகத்துக்குச் சங்கம் வழங்கிய பெயர்க்கல். . 14
எனது அன்பான குரு. . . 15
உப தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன் உரை. . . 19
Brain—Blood clot—Please read. . . 22
உப தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை உரை. . . 23
திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன் உரை. . . 25
நண்பியின் உரை. . . . 27
திருமதி தயாநிதி செல்வநாயகத்தின் ஏற்புரை. . . 30
திருமதி லீலா நாகரத்தினம். . . 34
Mrs. Leela Nagaratnam. . . 36
எழுத்தறிவித்த ஆசிரியைக்கு அஞ்சலி. . . 38
அன்பு நெறி. . . 40
Cancer update from John Hopkins Hospital, U S A. . . 43
எண்கண் கோயில் (படித்ததும் பிடித்ததும்). . . 44
திருமதி லீலா நாகரத்தினத்துக்குச் சங்கம் வழங்கிய பெயர்க்கல். . 45
யாழ் இந்து மகளிர் ஆரம்ப படசாலை. . . 46
கண்ணீர் அஞ்சலி—அமரர் வைத்தியக் கலாநிதி யோகநாதன். . . 47
இலக்கியமணி திருமதி பத்மா சோமகாந்தன். . . 48
ஸ்ரீமான் வெற்றிவேலு சபாநாயகம் அவர்கள். . . 51
Tortoise and the baboon. . . 52
தமிழர் புலம்பெயர்வும் உழைப்பும். . . 55
அம்மா. . . 61
1. தாய்ப் பாசம். . . 61
2. அம்மாவை வாங்க முடியுமா. . . 61
3. ஸ்ரீரங்கநாதனுக்கு தங்கச்சி. . . 62
Mrs. Pathmavathy Jeyaseelan. . . 63
நறுமணம் கமழும் காதற் கடிதங்கள். . . 64
பதின்நான்காம் ஆண்டறிக்கை. . . 67

"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்"
"It ought to be beautiful, I live here"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக் கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி - எங்கள்
பெருவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி - இயல்
சிந்தை வளம்பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# செய்ந்நன்றி

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வு இல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (திருக்குறள்)

என்பது திருவள்ளுவரின் வாக்காகும்.

இதற்கமைய எமது சங்கமானது எமக்கு கல்விச் செல்வத்தைப் புகட்டிய எமது கல்லூரியை மறவாது அதற்கு பல உதவிகளைச் செய்வதோடு அல்லாமல் அங்கு பயிலும் மாணவர்களை அழைத்து கலைநிகழ்சியும் வழங்கியுள்ளோம். எமது சங்கம் மட்டுமல்ல வெளிநாட்டிலுள்ள சங்கங்களும் கல்லூரிக்கு உதவி வருகின்றன. கல்லூரியும் தனது பழைய மாணவர்களை அழைத்து சிறப்பித்துள்ளது. இந்நன்றியானது சங்கிலித் தொடர்போல் தொடர்ந்து வருகின்றது.

இத்தொடர்பு இன்னும் விரிவடைந்து எமது சங்கம் புகழ் பூத்த மாணவிகளின் சிறப்பினை தொகுத்து கட்டுரைகளாக யாழ்நாதத்தில் பிரசுரிப்பதோடு அல்லாமல் சிலருக்கு பாராட்டுவிழாவினையும் எடுத்துள்ளது. அத்துடன் கஷ்டங்களையும், சவால்களையும் சமாளித்து எமது கல்லூரியை சிறப்புடன் வழிநடத்திச் சென்ற முன்னாள் அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜ் அவர்களை இன்று பாராட்டி விழாயெடுப்பதையிட்டு எமது சங்கம் பெருமைப்படுகின்றது.

இத்துடன் அல்லாது எமக்கு பலவகையிலும் உதவி புரிந்த அனைவரையும் நினைவுகூர்ந்து யாழ்நாதம் மூலமாக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு வருகின்றோம்.

தமது ஆக்கங்களை அளித்து உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். படித்ததும் பிடித்ததும் என்று தந்த செய்திகள் நெஞ்சை தொடுவதாக உள்ளது.

யாழ்நாதம் இதழ்களை அழகுற அமைத்து ஆண்டுதோறும் வெளியிட உதவிவரும் யூனி ஆட்ஸ் நிறுவனத்திற்கும் அதன் உரிமையாளர் பொ. விமலேந்திரன் அவர்கட்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

*61/2, Abdul Gaffoor Mawatha* *திருமதி விமலா மணிவாசகன்*
*Colombo 3* *மலர் ஆசிரியை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எமது வருடாந்த மலர்

யாழ் நாதம் எமது வருடாந்த மலராகும். இந்த மலரானது வருடமொன்றுக்கு ஒரு இதழாக விரிந்து மணம் வீசுகின்றது. ஒவ்வொரு இதழும் எங்கள் சங்க அங்கத்தவர்களின் ஆக்கங்களையும் சங்கச் செயற்பாடுகளையும் உள்ளடக்கி வெளிவருகிறது.

எமது சங்கம் எம் கல்லூரி தனது பொன்விழாவைக் கொண்டாடிய ஆண்டாகிய 1993ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. எமது சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் 1993ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 21ம் திகதி கொழும்பு வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில் உள்ள இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

அங்குரார்ப்பணக் கூட்டத்திலிருந்து 1994ம் ஆண்டு இறுதி வரையிலுமான சங்க ஆவணங்களையும் அங்கத்தவர் ஆக்கங்களையும் சேர்த்து இதழ் ஒன்றை 1995ம் ஆண்டு பிரசுரித்தோம். அதன் பின் ஆண்டு ஒன்றிற்கு ஒரு இதழாக வெளிவிட்டு இந்த ஆண்டாகிய 2008ல் இதழ் 14 உங்கள் கைகளில் புது மெருகோடு கிடைக்கிறது.

பழைய மாணவிகளும் நலன் விரும்பிகளும் இவ் விதழை வாசித்து எங்கள் சங்க அங்கத்தவர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பதற்கும் சங்கச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கும் உங்கள் ஆக்கபூர்வமன கருத்துக்களை எங்களுக்கு அறியத்தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி பயிலும் காலங்களில் தங்கள் சிந்தனைகளை ஒன்றுசேர்த்து கவிதைகள் கட்டுரைகளை உருவாக்கிய மாணவிகள் வளர்ந்து இல்லற வாழ்வில் புகுந்தபின் தமது எழுத்தாற்றலை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. எழுத்துலகில் பிரகாசிப்போர் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. யாழ்நாதம் மலர் இல்லத்தரசிகளுக்கும் இளம் வயதினருக்கும் தங்கள் எழுத்தாற்றலை வளர்ப்பதற்கு ஒரு சாதனமாக இருக்கிறது.

யாழ் நாதம் இதழ்கள் தொடர்ந்து விரிந்து அணையாத தீபமாக விளங்கவேண்டும் என்று எங்கள் கல்லூரியின் காவற் தெய்வமாகிய நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

மேலதிக சங்க விபரங்களுக்கு www.jhlc.lk என்ற வெப் தளத்தைப் பார்க்கவும்.

எங்கள் சங்கப் போஷகரும் கல்லூரி ஆரம்பித்த காலத்திலிருந்தே ஆசிரியராகக் கடமையாற்றி பின் உப அதிபராக உயர்வுபெற்றவருமான திருமதி லீலா நாகரத்தினம் அவர்கள் 2007.02.07 அன்று வன்கூவரில் இறைவனடி சேர்ந்தார். அவருக்கு இவ்விதழ் சமர்ப்பணம்.

*Tel: 2573638*
*E.mail: ambalv@slt.lk*

*திருமதி சிவகாமி அம்பலவாணர்*
*சங்கத் தலைவி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை"

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு ஏற்பாட்டில்

# "சர்வதேச மகளிர் தின நிகழ்வு"

இந்நிகழ்வு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 08.03.2007 வியாழக் கிழமை மாலை 6.10 மணிக்கு சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணரின் தலைமையில் நடைபெற்றது. திருமதி குகஜோதி விஜயநாயகத்தின் தேவாரத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. எமது சங்க போஷகர் திருமதி லீலா நாகரத்தினம் அவர்களின் மறைவை நினைவு கூர்ந்து இரண்டு நிமிடங்கள் அஞ்சலி செலுத்தினோம்.

* * * * * * * *

பாராட்டு நிகழ்வு – கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவியும் சங்கச் செயலாளருமான **திருமதி தயாநிதி செல்வநாயகம்** சிறந்த பெண்மணியாகப் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இவருக்கு பிரதம அதிதி புரவலர் ஹாஷிம் உமர் அவர்களின் சார்பில் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை பொன்னாடை போர்த்தார். செல்வி சற்சொரூபவதி நாதன் மலர்ச்செண்டு கொடுத்தார். புரவலர் ஹாஷிம் உமர் அவர்கள் பெயர்க் கல் (Plaque) வழங்கினார். (படம் முன் உள்அட்டை)

பிரதம அதிதியும் சுயாதீன தொலைக்காட்சி சேவைப் பணிப்பாளர் சபை உறுப்பினருமாகிய புரவலர் ஹாஷிம் உமர் அவர்கள் திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்களின் மாணவராக சிறுவயதில் கல்வி கற்றவர். தமது ஆசிரியையைக் கௌரவிக்கும் இன்றைய நிகழ்விற்கு பிரதம அதிதியாக வந்துள்ளது மகிழ்ச்சியையும் பெருமையையும் தரும் விடயம் எனத் தெரிவித்தார். இவருக்கு சங்கத்தின் சார்பில் திரு. கயிலாசபிள்ளை மலர்மாலை அணிவித்தார்.

* * * * * * * *

கௌரவ விருந்தினர் திருமதி பிரகதா தில்லைநடராஜன் அவர்கள் திருமதி தயாநிதி செல்வநாயகத்தின் அபிமான மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பம்பலப்பிட்டிய பிரகதீஸ்வராலய நுண்கலைக் கல்லூரி அதிபரும், Belvoir சர்வதேசக் கல்லூரி நடன ஆசிரியையும் ஆவார். இவர் தனது ஆசிரியைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாடை போர்த்து, மலர்ச்செண்டு கொடுத்து, அன்பளிப்பு வழங்கினார். (படம் முன் உள்அட்டை) கௌரவ விருந்தினருக்கு திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் மலர்மாலை அணிவித்தார்.

* * * * * * * *

இன்று கௌரவம் பெறும் திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்களைப் பாராட்டி அவருடனான தமது நெருங்கிய தொடர்பு குறித்து முதலில் சகலகலா வித்தகியும், 42 வருட ஊடகத்துறை சேவை மூலம் கல்லூரிக்கு புகழ் சேர்த்தவரும், சங்க ஸ்தாபக தலைவரும், எமது சங்கத்தை வழிநடத்தும் முக்கிய உறுப்பினருமான செல்வி சற்சொரூபவதி நாதன் உரையாற்றினார்.

* * * * * * * *

அடுத்து சென்ற வருடம் சர்வதேச மகளிர் தினத்தில் சங்கத்தின் "பார் புகழ் சேவகி" என்ற கௌரவத்தைப் பெற்ற சமய சமூக சேவகி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள் உரையாற்றினார்.

* * * * * * * *

எமது சங்க நடவடிக்கைகள் அனைத்திலும் உறுதுணையாக காரியம் ஆற்றும் செயற்குழு உறுப்பினரும் ஆன்மீகவாதியுமான திருமதி பொன்மலர் கந்தசாமி அடுத்து பாராட்டுரையை வழங்கினார்.

* * * * * * * *

அடுத்து திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன் உரையாற்றினார். இவர் யாழ். பல்கலைக் கழகத்தில் கல்விகற்ற காலத்தில் அங்கு போதனாசிரியராக இருந்த திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்களை தனது ஆதார வழிகாட்டியாக கருதியவர். எமது சங்க செயற்குழு உறுப்பினர். காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தில் உயர்பதவி வகித்துக் கொண்டு பெண்களுக்கான சேலை, உடைகள், அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்யும் 'கலாஞ்சலி சாறீஸ்' நிறுவனத்தை நடாத்தி வருகின்றார்.

* * * * * * * *

திருமதி பரமேஸ்வரி மகேசன் அவர்கள் திருமதி தயாநிதி செல்வநாயகத்துடன் யாழ். பல்கலைக் கழகத்தில் ஒன்றாக பிரவேசித்தவர். அவரது நெருங்கிய சினேகிதியும் ஆவார். இவர் தனது பாராட்டுரையை வழங்கினார்.

* * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு இனிய தமிழில் யாவவரையும் மகிழ்வுறச் செய்வதற்கு "இலக்கியப் பெண்கள்" என்னும் தலைப்பில் சமூக ஜோதி எம்.ஏ.ரபீக் அவர்கள் தனது சிறப்பு உரையை நிகழ்த்தினார். இவருக்கு சங்கத்தின் சார்பில் திரு கந்தசாமி அவர்கள் மலர்மாலை அணிவித்தார்.

* * * * * * * *

பிறகு திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் பொன்னாடை போர்த்தார். திருமதி அபிராமி கயிலாசபிள்ளை மலர்மாலை அணிவித்தார். செல்வி சற்சொரூபவதி நாதன் பெயர்க் கல் (Plaque) வழங்கினார். (படம் முன் உள்அட்டை) அடுத்து மற்றையோரும் அவருக்கு கௌரவமும் பரிசுகளும் வழங்கினார்கள். (படம் முன் உள்அட்டை)

* * * * * * * *

இதன்பின் இன்றைய சிறந்த பெண்மணியான திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்கள் தனது ஏற்புறைரயை வழங்கினார்.

* * * * * * * *

யாழ் நாதம் வெளியீடு – சங்கத்தின் வருடாந்த வெளியீடான யாழ் நாதம் சஞ்சிகை இதழ் 13 வெளியிடப்பட்டது. இது வரைகாலமும் பதிப்பாசிரியையாக இருந்தவரும், தற்போதைய தலைவியுமான திருமதி சிவகாமி அம்பலவாணர் அறிமுக உரையை நிகழ்த்தினார்.

* * * * * * * *

அடுத்ததாக யாழ் நாதத்தின் முதற் பிரதியை பதிப்பாசிரியர் பிரதம அதிதிக்கு கையளித்தார். (படம் முன் உள்அட்டை) பிரதம அதிதி யாழ்நாதம் சஞ்சிகைக்கு ரூபா 5,000 அன்பளிப்புச் செய்தார். அடுத்து பிரதம அதிதி யாழ்நாத பிரதியை திருமதி தயாநிதி செல்வநாயகத்துக்கு கையளித்தார். பின்னர் இவ்வாண்டின் யாழ்நாத சஞ்சிகையின் ஆசிரியராக கடமையாற்ற இருக்கும் திருமதி விமலா மணிவாசகன் மேடையில் அமர்ந்திருந்தவர்களுக்கு யாழ்நாத சஞ்சிகையை வழங்கினார். (படம் முன் உள்அட்டை) சபையோருக்கு செல்வி சிவமலர் சுப்பிரமணியம் யாழ்நாத சஞ்சிகையை வழங்கினார். அடுத்து சபையோர்களில் சிலர் உரை நிகழ்த்தினார்கள்.

* * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த அம்சமாக கலை நிகழ்ச்சியை கலாபூஷணம் சோக்கெல்லோ சண்முகம் வில்லடி பாட்டுக் குழுவினர் "தர்மத்தை மறுபடியும் வெல்லக் காண்போம்" என்னும் தலைப்பில் பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தை கருவூலமாகக் கொண்ட புதுமையான வில்லிசை நிகழ்ச்சியை வழங்கினார்கள். இவருக்கு சங்கத்தின் சார்பில் திரு செந்தில்நாதன் அவர்கள் மலர்மாலை அணிவித்தார்.

தாமோதரம்பிள்ளை சண்முகநாதனை பலருக்குத் தெரியாது. "சோக்கெல்லோ சண்முகத்தை" எல்லோருக்கும் தெரியும். வில்லிசைக்கு $1^1/_2$ தசாப்த காலத்திற்கு முன்பு வந்த ஒரு நாடகக் கலைஞர் இவர். சில வருடங்களுக்கு முன்பு தன்னுடைய நகைச்சுவைக் கதம்பநிகழ்ச்சி மூலம் ஜெர்மனி நாட்டில் புலம்பெயர்ந்த தமிழர்களை அமரர் ரேலங்கி செல்வராசாவுடன் இணைந்து மகிழ்வித்த சோக்கெல்லோ சண்முகம் தமிழ் நாட்டில் இன்று பட்டிதொட்டி எங்கணும் கால்பதித்துள்ளார். நாடகம், வில்லிசை, மேடைப்பேச்சு, வானொலி வர்ணனை, எழுத்தாக்கம் என இவர் ஒரு பல்துறைக் கலைஞர். ஒரு முழுநேரக் கலைஞர். உலக சாதனைக்காக $7^1/_2$ மணித்தியாலங்கள் குறிப்புகள் எதுவுமின்றி தொடர்ந்து பேசியவர். புரவலர் ஹாஷிம் உமர் இந்நிகழ்ச்சிக்கு அனுசரணை வழங்கியதுடன் முழுநேரமும் பார்வையாளராக அமர்ந்திருந்தவர். 72 வயதையும் கடந்து செல்லும் இந்த உழைக்கும் கலைஞரையும், குழுவினரையும் நாமும் மனதாரப் பாராட்டுகிறோம்.

இவர்களுக்கு "கலாஞ்சலி சாறீஸ்" நிறுவனத்தின் உரிமையாளரும், சங்க செயற்குழு உறுப்பினருமான திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன் அவர்கள் தமது அன்பளிப்பாக சில பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

* * * * * * * *

இறுதியாக உதவிச் செயலாளர் திருமதி கௌரி ரமணா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

* * * * * * * *

திருமதி குகஜோதி விஜயநாயகம் அவர்களுடன் பழைய மாணவிகள் எல்லோரும் சேர்ந்து பாடிய கல்லூரிக் கீதத்துடன் எமது சர்வதேச மகளிர் தின நிகழ்வு நிறைவு பெற்றது.

* * * * * * * *

இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியவர் உபதலைவி திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் அவர்கள்.

* * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணரின்

# தலைமை உரை

### சர்வதேச மகளிர் தின விழா – 2007.03.08 – அறிமுகம்

பிரதம அதிதி புரவலர் ஹாஷிம் உமர், கௌரவ விருந்தினர் திருமதி பிரகதா தில்லைநடராஜன், விழா நாயகி திருமதி தயாநிதி செல்வநாயகம், மற்றும் இங்கு உரையாற்ற இருப்போர், பெரியோர்கள், தாய்மார்கள், குழந்தைச்செல்வங்கள் எல்லோருக்கும் எனது அன்பு கனிந்த வணக்கங்கள்.

சர்வதேச மகளிர் தினம் பெண்களுக்கு ஒரு முக்கிய தினமாகும். எங்களுடைய சமூகத்தில் அன்றைய நிலை பெண் ஆணுக்கு அடிமை. ஒரு பெண் பிறந்தது முதல் கலியாணம் செய்யும் வரை தன் பெற்றோருக்கு அடங்கி நடக்கவேண்டும். கலியாணமானபின் கணவனுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்பது. ஒரு பெண்ணிடம் இருந்து பலரும் எதிர்பார்ப்பது அவள் வீட்டிற்குள் இருந்து வீட்டு வேலைகளைச்செய்வதும் கணவனையும் பிள்ளைகளையும் பராமரித்தலும் ஆகும்.

ஆனாலும் இன்றைய நிலை வேறு. தாம் ஆடவருக்குச் சளைத்தவர் அல்லர் எனப் பெண்கள் நிரூபித்துள்ளார்கள். எத்தொழிலை எடுத்தாலும் அத்தொழிலில் ஆடவர்களுக்குச் சமமாக உழைக்கும் ஆற்றல் படைத்தவர்கள் பெண்கள் என்பது கண்கூடு. வைத்தியத் துறை, தொழில் நுட்பம், கட்டடக் கலை, இயந்திரக் கலை, விஞ்ஞானம் இப்படிப்பட்ட பலதுறைகளிலும் பெண்கள் சிறந்து பிரகாசிக்கின்றனர்.

சர்வதேச மகளிர் தினம் பெண்கள் தமது சம உரிமைக்குப் போராடியதன் விளைவாகப் பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் பெண்களாகிய நாம் இதை அனுஷ்டிப்பதற்கு முக்கிய காரணம் இன்னமும் பலவகையில் பெண்கள் துன்பப்படுவதும் அடிமைகளாகக் கருதப்படுவதும் இருந்து வருவதால் தான்.

உரிமைகள் சட்டரீதியாகக் கிடைக்கப் பெற்றிருப்பினும் அவை நடைமுறையில் பேணப்படாத நிலை காணப்படுகிறது. பெண்களுக்குத் தொடர்ந்தும் போராட்டம் இருப்பதை குறிப்பதாகவே இத்தினத்தைக் கருதுகிறோம். எனவே பெண்கள் அமைப்பாகிய எமது சங்கமும் இத்தினத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. பாரிய அளவில் செய்ய முடியாவிட்டாலும் சிறிய அளவில் விழிப்புணர்வு ஊட்ட முயற்சி செய்கிறோம்.

சர்வதேச மகளிர் தினமாகிய இன்று நாம் எங்கள் கல்லூரியின் புகழ் பூத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவியும் சங்கச் செயலாளருமாகிய திருமதி தயாநிதி செல்வநாயகத்தை கௌரவிப்பதில் பெருமைப் படுகிறோம்.

எங்கள் கல்லூரியின் முதல் மாணவிகளில் ஒருவராகிய இவர் நான்காம் வகுப்பில் இருந்து பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு வரையும் எங்கள் கல்லூரியிலேயே கல்வி கற்றார். அத்துடன் எங்கள் கல்லூரியில் இருந்தே பல்கலைக் கழகத்தில் கற்பதற்கு உரிய தகுதியும் பெற்று பல்கலைக் கழகம் சென்று பட்டதாரியாக வெளிவந்தார்.

தயாநிதி அக்கா என எங்களுக்கு அறிமுகமான இவர் ஆசிரியத்துறையில் சிறந்து விளங்கிய ஒரு பெண்ணாவார். இவரிடம் கல்விகற்ற மாணவர்களில் பலர், பல துறைகளிலும் பிரகாசிக்கின்றனர் என்றால் மிகையாகாது.

எங்கள் சங்க அங்கத்தவர்களாகிய நாம் தயாநிதி அக்காவில் மிகுந்த மதிப்பு வைத்திருக்கிறோம் ஏனெனில் எங்கள் சங்கம் உருவாவதற்கு ஆரம்ப காலத்தில் அதாவது 1993ஆம் ஆண்டு தயாநிதி அக்கா அரும்பாடுபட்டார்.

இன்றைய பிரதம அதிதியாக சுயாதீன தொலைக்காட்சிச் சேவைப் பணிப்பாளர் சபை உறுப்பினராகிய புரவலர் ஹாஷிம் உமர் வருகை தந்திருக்கிறார். எங்கள் அழைப்பை ஏற்று அவர் இங்கு வருகை தந்தமை எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இன்றைய கௌரவ விருந்தினராக பம்பலப்பிட்டிய பிரகதீஸ்வராலய நுண்கலைக் கல்லூரி அதிபரும், Belvoir சர்வதேசக் கல்லூரி நடன ஆசிரியையும் ஆகிய திருமதி பிரகதா தில்லைநடராஜன் வருகை தந்து விழாவைச் சிறப்பித்து எமக்கு மகழ்வூட்டுகிறார்.

இன்றைய பிரதம அதிதியும், கௌரவ விருந்தினரும், எமது விழாநாயகியாகிய திருமதி தயாநிதி செல்வநாயகத்தின் மாணவர்களாவர். அத்துடன் தற்போது cotton புடவை business இல் கொடி கட்டிப்பறப்பவரும் இன்று இங்கு உரையாற்ற இருப்பவருமாகிய திருமதி மிதிலா ஶ்ரீ பத்மநாதன் இவரின் மாணவியாக இல்லாவிட்டாலும் இவரைத் தனது வழிகாட்டியாகப் பின்பற்றி உன்னத நிலையை அடைந்தவர்.

எங்கள் சங்க உபதலைவிகளான செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, செயற்குழு உறுப்பினர் திருமதி பொன்மலர் கந்தசாமி ஆகியோரும் இங்கு உரையாற்றுவார்கள். செல்வி சற்சொரூபவதி நாதன் 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தலைவியாக இருந்து சங்கத்தை வழிநடத்தி வந்துள்ளார். இவரை நாம் 2005ஆம் ஆண்டு கௌரவித்தோம். திருமதி அபிராமி கயிலாசபிள்ளை எந்த ஒரு நிகழ்விற்கும் முன்னின்று உழைத்து சங்கத்தின் ஆணிவேராகத் திகழ்பவர். இவரை நாம் 2006ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவித்தோம். திருமதி பொன்மலர் கந்தசாமி அமைதியாக சங்க வளர்ச்சிக்கு உழைப்பவர்.

தொடர்ந்து கௌரவம், பரிசு வழங்கல், விழாநாயகியின் ஏற்புரை நிகழ்வுகள் இடம்பெறும்.

எங்கள் சங்க வருடாந்த சஞ்சிகையாகிய யாழ் நாதம் இதழ் 13 வெளியீடு இன்று நடைபெற இருக்கிறது.

சமூகஜோதி M. A. Rafeek இலக்கியப் பெண்கள் பற்றி சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

கலாபூஷணம் சோக்கெல்லோ சண்முகம் வில்லடி பாட்டுக் குழு பாஞ்சாலி சபதத்தை மையமாக வைத்து வில்லிசை நிகழ்த்தவுள்ளார்கள்.

இங்கு நன்றியுரை கூறவுள்ள உதவிச் செயலாளர் திருமதி கௌரி ரமணா வயதில் சிறியவராயினும் ஆற்றல் மிகுந்தவர்.

நிகழ்ச்சித் தொகுப்பு நடத்திக்கொண்டிருக்கும் உபதலைவி திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் சொல்லாற்றல் மிக்கவரென தெரியப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

எங்கள் சங்க நிகழ்வுகள் எல்லாவற்றிற்கும் தம் இனிய குரலால் இறை வணக்கம் செலுத்தி ஆரம்பித்து வைப்பவர்கள் சகோதரிகளாகிய திருமதி சிவச்செல்வி சிவலோகநாதனும் திருமதி குகஜோதி விஜயநாயகமும் ஆவர். இவர்கள் கல்லூரியில் படித்த காலத்தில் இருந்தே தம் குரல் இனிமையால் எங்களைப் பரவசப் படுத்தியவர்கள்.

பெருந்திரளாக எமது அழைப்பை ஏற்று இங்கு வந்தமைக்கு உங்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் உங்கள் அனைவரையும் முழு நிகழ்ச்சிக்கும் நின்று எங்களை மகிழ்விக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்

இங்கு உரையாற்ற இருப்போர் தயாநிதி அக்காவுடன் நெருங்கிய தொடர்பு டையவர்களாக இருந்தவர்கள், இருப்பவர்கள், எனவே உங்களுக்கும் அவர்களுக்கும் மத்தியில் அதிக நேரம் நிற்காமல் எனது அறிமுகத்தை முடித்துக்கொள்கிறேன்.

நன்றி

வணக்கம்

## இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரவலர் ஹாஷிம் உமர் அவர்கள் வழங்கிய பெயர்க் கல் (Plaque)

# International Women's Day - 2007



## மாண்புறு மகளிர் விருது

1957 ல் தனது கல்விப் பணியை ஆரம்பித்து
இலங்கையின் பல்பாகங்களிலும் 17 வருடங்கள் கடமையாற்றி
யாழ் பல்கலைக் கழகத்தில் 13 வருடங்கள்
விரிவுரையாளராக சேவையாற்றி

**அறிவு பூர்வமான மாணவ உலகை சிருஷ்டிக்கும்
ஆசிரியப் பணிகளில் அருந்தொண்டாற்றிய**

யாழ் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவி

**திருமதி தயாநிதி செல்வநாயகம்**
அவர்களுக்கு

சர்வதேச மகளிர் தினம் – 2007 இல்
**"சிறந்த பெண்மணி"** யாகத் தெரிவு செய்யப்பட்டு
இக் கௌரவ விருது வழங்கப்பட்டது

**எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்.**

மாணவ சமுதாயத்தின் சார்பில்
ஹாசிம் உமர்

யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கம்
2007 மார்ச் 08 ஆம் நாள்
சரஸ்வதி மண்டபம் – பம்பலப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அதிதி புரவலர் ஹாஷிம் உமர் அவர்களின் உரை

விழாத் தலைவி அவர்களே! எனது ஆசிரியை திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்களே! தாய்மார்களே!பெரியோர்களே! விழா ஏற்பாட்டாளர்களே வணக்கம். அஸ்ஸலாமு அலைக்கும்.

என்னை இங்கு பேசுமாறு பணித்திருக்கிறார்கள். நான் பேச்சாளர் அல்ல என்பது அவர்களுக்குத் தெரியும், ஆனாலும் பிரதம அதிதி என்ற வகையில் பேசும்படி கேட்டிருக்கிறார்கள். பல விழாக்களில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருக்கிறேன். அதிகமாக பேசியதில்லை.

இந்த விழாவைப் பார்க்கும்போது, அதுவும் எனக்கு தமிழ் கற்றுத்தந்த ஆசிரியை அவர்கள் கௌரவிக்கப்பட இருக்கும் இந்த நிகழ்வைப் பார்க்கும்போது, இவ்வைபவத்தில் இரண்டொரு வார்த்தைகள் பேசக்கிடைத்ததைப் பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன்.

இதற்கு வாய்ப்புத்தந்தவர்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குத் தமிழைக் கற்றுத் தந்தது மட்டுமல்ல, தமிழ் மீது பற்றை ஏற்படுத்தியதும் எனது ஆசிரியை அவர்கள் தான். பிறருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தைக்கூட இளமையிலேயே என் நெஞ்சில் விதைத்தவர்தான் எனது ஆசிரியை.

இன்று என்னை ஒரு செல்வந்தர் என்று நீங்கள் எண்ணிக் கொண்டு இருப்பீர்கள். உண்மையில் நான் செல்வந்தன் அல்ல, கல்வியில் பரம ஏழை. உண்மையான செல்வந்தர் எனது ஆசிரியை அவர்கள் தான். கல்வியை விட சிறந்த செல்வம் இல்லை என்பார்கள். அப்படிப் பார்க்கும் போது கல்விச் செல்வத்தை வாரி இறைப்பவராக இருக்கும் எனது ஆசிரியைதானே செல்வந்தர்.

பணச் செல்வம் கொடுக்கக் கொடுக்க குறையக் கூடியது. ஆனால் கல்விச் செல்வமோ கொடுக்கக் கொடுக்கக் கூடிக் கொண்டே போகும். அப்பேர்ப்பட்ட அருமையான செல்வம் எனது ஆசிரியை இடத்தில் உண்டு. அவருடைய பெயர் கூட செல்வநாயகம் என்று அமைந்திருப்பது அவருக்கு ஒரு தனிச் சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம் செல்வத்தோடு தான் சேரும் என்று சொல்வார்கள். இந்த செல்வநாயகத்தோடு தயாநிதி என்ற செல்வமும் இல்லற வாழ்வின் மூலம் இணைந்திருந்தது இறைவனுடைய ஏற்பாடு என்று எண்ணுகிறேன்.

இன்று அவர் கௌரவிக்கப்பட இருக்கும் நிகழ்ச்சியைப் பார்க்க நான் மிகவும் ஆவலுடன் இருக்கிறேன். அவருடைய நல்லாசியும், வாழ்த்துக்களும் எனக்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

இந்த மகளிர் தின விழாவை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறீர்கள். இவ்வளவு அருமையான விழாவை ஏற்பாடு செய்த யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தை பாராட்டி எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

நன்றி.

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு வழங்கிய பெயர்க் கல் (Plaque)



Appreciation Award
to
Mrs Thayanithy Selvayayam
For her excellent Service
In the educational Field and
Valuable Contribution to our
Association From its inception
Jaffna Hindu Ladies' College
Old girls Association
Colombo - Branch
8/03/2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்பான குரு

எனது மதிப்பிற்குரிய ஆசிரியர் திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்களுக்கும் மற்றும் தலைவர் அன்பர்கள் யாவருக்கும் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

1958ம் ஆண்டு நாட்டின் சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணம் செல்லவேண்டிய ஒரு நிலை எல்லோர்க்கும் ஏற்பட்டது. எனது கல்வியை மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் தொடர வேண்டுமென்று விரும்பி அங்கு என் கல்வியைத் தொடர்ந்தேன்.

அப்பொழுதுதான் எனக்கு அந்த மாபெரும் பாக்கியம் கிடைத்தது. ஆம், இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்ற திருமதி தயாநிதி அவர்கள் வந்தார்கள். அதுவும் எமது வகுப்பிற்கே ஆசிரியராக வந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைந்தோம்.

நாட்கள் செல்லச் செல்ல அவர் எங்கள் எல்லோர் மனதிலும் குடி புகுந்து விட்டார். எங்கள் எல்லோரையும் தனது அன்பால் வசப்படுத்திக் கட்டிப்போட்டார். அவர் எமக்கு பல பாடங்களைத் தொடர்ந்து கற்பித்து வந்தார்.

எனது ஆசிரியர் பாடங்களை விளக்கும்போது ஒவ்வொரு பகுதியையும் பல உதாரணங்கள் காட்டி தெள்ளத் தெளிவாக அக்கு வேறு ஆணிவேறாக விளக்கம் கொடுப்பார்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது சான்றோர் வாக்கு. மாதா என்பவள் பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி அரவணைத்து அன்பாக வளர்ப்பவள். தந்தையானவர் குடும்பத்திற்குத் தலைவனாகவும், குடும்பத்தைக் கொண்டு நடத்தும் வல்லமையும் கண்டிப்பும் உள்ளவர்.

ஆனால் குரு இம் மூன்றையும் விட அதிக சிறப்புள்ளவர், காரணம் கல்வியால் அகக்கண்ணையும், புறக்கண்ணையும் திறந்து விடுபவர். ஆகவே குருவின் சிறப்புத்தான் சிறப்பு. தெய்வம் என்பது அதற்குப் பிற்பாடுதான்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கொள்கையுடன் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை உருவாக்கி நல்வழிப் படுத்தி தமிழ் என்னும் அமுதத்தை ஊட்டி வளர்த்தார். ஒரு மாணவிக்கோ. ஒரு மாணவனுக்கோ ஒரு நல்ல குரு அமைந்தால் அவர்களின் எதிர்காலமானது கல்வியின் சிகரத்திற்கே சென்றுவிடும்.

எனது ஆசிரியர் தயாநிதி அவர்கள் தயாள குணமுள்ளவர். அதை அறிந்து தானோ என்னவோ அவர்களின் பெற்றோர் முன் கூட்டியே இப் பெயரை வைத்து விட்டார்கள் போலும். நிதி என்பது செல்வம் அவரின் முகத்தில் என்றும் லக்சுமி சிரித்தபடியே வாசஞ் செய்வாள்.

ஒரு நாளாவது எங்களை கோபத்துடன் பேசினதே இல்லை. ஒரு தாயைப் போல அன்பு காட்டி கல்வியைப் புகட்டுவார். ஒரு நல்ல குருவின் சிறப்பை அறிய இரு சம்பவங்கள் என் மனதில் எழுகின்றது. அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒன்று மொகலாய மகா சக்கரவர்த்தியான அக்பருடைய தர்பாரில் ஒரு வெளியூர் இசைப் பாடகன் இன்னிசை வழங்கிக் கொண்டு இருக்கிறான். அந்த இனிமையான இசையைக் கேட்டு அக்பர் முதல் தர்பாரில் இருந்த அனைவருமே மெய் மறந்து இசையால் கட்டுண்டு இருந்தனர். பாடகன் தன் இசையை இனிதே முடித்தான். அக்பர் மகா சக்கரவர்த்தி, யாருக்குமே தலைவணங்காத அந்த மாமன்னர், அவன் கையைப் பிடித்து கண்ணில் ஒற்றினாராம். அக்பர் அப்பாடகனைப் பார்த்து "யாரப்பா! உனது குரு" என்றார். "இவ்வளவு அருமையாகப் பாடுகிறாயே! உன் குருவை நான் பார்க்க வேண்டும்! என்னை அவரிடம் அழைத்துச் செல்!" என்றாராம்.

பாடகனும் அழைத்துச் சென்றான். அந்த குருவின் இருப்பிடத்தை அடைந்த போது திகைத்து விட்டார் அக்பர். ஒரு ஓலைக் குடிசை அதில் ஒரு சுவாமி அறை, அதில் அவரது தம்புரா ஒன்றும், சில சமையல் பாத்திரங்களும் இருந்தன. அந்த சுவாமி அறையின் ஓரத்தில் ஓலைச் சுவடுகள் மாத்திரம் நிறைய அடுக்கடுக்காக அடுக்கி வைக்கப் பட்டிருந்தது.

அதுதான் அவருடைய பொக்கிஷம். அந்தக் கட்டுக் கட்டான ஓலைச் சுவடுகளில் தான் அவரின் இசை உயிரே இருந்தது. அக்பர் சென்ற நேரத்தில் குரு இசையுடன் கலந்திருந்தார். அக்பரும் அவரின் இசை முடியும் வரை வெளியே காத்து நின்றார். குரு தனது இசையில் இருந்து வெளிப்பட்டு வெளியே வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு வெளியே வந்து பார்த்தபோது கூனிக் குறுகி மகாசக்கரவர்த்தி அவரை வணங்கி நின்று "குருவே! இன்று உங்கள் இசையின் மகத்துவத்தை அறிந்து கொண்டேன்! உங்கள் சிஷ்யனின் மூலம், அறிந்து பரவசமடைந்தேன்!" என்றார். அப்பொழுது குரு "மாமன்னா! நீங்கள் அரசர்களுக்கெல்லாம் பேரரசர். நீங்களா என்னை வணங்குவது? நீங்களா என்னை வந்து பார்ப்பது?" என்று சொல்ல அக்பர் "இல்லை. நான் பேரரசர். நீங்களோ இசைக்குப் பேரரசர், மாமேதை, இசை ஊற்று, இந்த பிரபஞ்சத்தையே உங்கள் இசையால் ஆள்பவர்" என்று சொன்னாராம்.

இராமாயணத்தில் இன்னுமொரு சம்பவத்தைக் கூற விரும்புகிறேன். சீதாதேவிக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அப்பொழுது ஒரு அரசர் ஜனகராஜனைப் பார்த்து "உங்கள் மகளை ஸ்ரீ ராமனுக்கு திருமணம் செய்ய ஏன் முடிவு செய்தீர்கள்" என்று கேட்டார். அதற்கு ஜனகர் ஒரு விளக்கத்தை சொன்னாராம்.

என்னவென்றால் "வசிட்டர் என்ற முனிவர் முனிவர்களுக்தெல்லாம் முனிவர். வசிட்டருக்குத் தெரியாதது ஒனந்றுமில்லை. அதி சிறந்த தன் ஞான திருஷ்ட்டியால் எல்லாம் அறிந்து கொள்பவர். வேத ஆகமங்கள் எல்லாவற்றிலும் பாண்டித்தியம் உள்ளவர்.

அறிவில், பண்பில், பொறுமையில் சிறந்தவர். தருமத்தை நேசிப்பவர், நீதி வழுவாதவர். அவரின் திருவாயிலிருந்து ஒரு சொல் வெளிவருவதென்றால் மிகவும் கடினம். அப்படியான அதிசிறப்பு வாய்ந்த மாமுனிவரின் பிரதம சிஷ்யன் ஸ்ரீ ராமபிரான்.

ஆகவே, ஸ்ரீ ராமருடைய நற்குணங்கள் யாவுமே வசிட்டரைப் போல் இருக்கும் என்பதை நன்கு அறிந்து தான் இத்திருமணத்திற்குச் சம்மதித்தேன்" என்றாராம் ஜனகர். அரசனோ ஒன்றுமே பேச முடியாமல் திகைத்து நின்றாராம்.

இதிலிருந்து நான் தெரிந்து கொண்டது என்னவென்றால் குருவின் பார்வை, குருவின் போதனை, குருவின் மாசற்ற அன்பு, பண்பு என்பவை நம்மீது பட்டால் தான் நமது புறக்கண் மட்டுமல்ல அகக் கண்ணும் திறந்து எம்மை நல்வழிப்படுத்தி சிகரத்திற்கே கொண்டு செல்லும் என்பதை உறுதிப் படுத்தலாம்.

வாழ்வியலோடு நாம் எப்படி வாழவேண்டுமென்று சில தத்துவங்கள் மூலம் எங்களுக்கு விளக்கம் கொடுத்துள்ளார். பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்று கேட்டவுடன் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்று தான் சொல்வார்கள். அவை எல்லோருக்கும் தெரிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயம். இச்சொற்கள் எனது சிறு வயதிலேயே அறிந்து கொண்ட விஷயம்.

எனது ஆசிரியர் இன்றைய காலக் கட்டடத்தில் நாம் எப்படி வாழவேண்டுமென்பதை அன்றே சொல்லிவிட்டார். அவை பசு மரத்தாணி போல் என்மனதில் பதிந்து விட்டன.

1. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
2. போன நாள் மீண்டும் வராது.
3. எதையும் செய்வதற்கு முன் ஏன்? எப்படி? எதற்கு? என்று சிந்தித்து ஆராய்ந்து செயல்படு.
4. செய்வதைச் திருந்தச் செய்.

என்பது தான் அவருடைய வாழ்வியல் தத்துவங்கள். ஆகவே அன்றைய ஆசிரியர்கள் எல்லோருமே நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டுமென்பதே அன்றைய ஆசிரியர்களின் இலட்சியம். உண்மையாகவே உழைத்தார்கள். எத்தனையோ ஆசிரியர்கள் தங்கள் வாழ் நாட்களையே தியாகம் செய்தார்கள். எத்தனையோ வாய்ப்புகள், இழப்புகள் என்பனவற்றை சந்தித்துள்ளார்கள்.

அப்படிப்பட்ட ஆசிரியர்களில் ஒருவர் தான் எனது ஆசிரியரான திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்கள். அவர் என்றும் ஆரோக்கியத்துடன் நீடூழி காலம் வாழவேண்டும் என்று இறைவனை வேண்டி விடைபெறுகிறேன். இவ்விழாவில் என்னை கௌரவ விருந்தினராக அழைத்து சிறப்பித்ததற்கும் என் குருவைப் பற்றிப் பேச எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்ததற்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி,

வணக்கம்.

பிரகதீஷ்வராலயா நுண்கலைக் கல்லூரி அதிபர்
**திருமதி பிரகதா தில்லைநடராஜன்**
நிகழ்வு 08/03/2007
சரஸ்வதி மண்டபம், பம்பலப்பிட்டி, கொழும்பு-4

அட்டைப்படம்: 2007.07.01 அன்று நடைபெற்ற நடுவருட மலிவு விற்பனைக்கு வருகை தந்த சங்க அங்கத்தவர்களின் புகைப்படம் (குறிப்பு—பக்கம் 70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க உபதலைவி செல்வி சற்சொரூபவதி நாதனின் உரை

தயாநிதி அக்கா, ஆம் அவவை அக்கா என்று அழைத்தால் அவருக்கு அலாதிப் பிரியம், என்னுடன் பிறந்த அக்காவை நான் அக்கா என்று அழைத்த பின் பாசத்தோடு ஒருவரை அக்கா என்று அழைப்பது தயாநிதி அக்காவைத்தான். பாடசாலை நாட்களில் நான் அவருக்கு வெகுவாக ஜூனியர் ஒரு மரியாதையுடன் அவரைப் பார்ப்பேன். கிணற்றடியில் தண்ணீரை வாளியில் கயிறு மூலம் எடுத்து மதிய வேளையில் Senior அக்காக்களுக்கு குடிப்பதற்காக நாம் ஊற்றுவோம், அப்பொழுது தயாநிதி அக்காவும் பகல் போசன வேளையில் தண்ணீர் அருந்த வருவார். எனக்கு அவர்களுக்கு தண்ணீர் கொடுப்பதில் அலாதித் திருப்தி. அந்த அளவில்தான் அவருடன் அறிமுகம். பின்னர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட நாளில் இருந்து ஒரு நெருங்கிய உறவு ஏற்பட்டது. நான் தலைவி அவர் செயலாளர் இருவரும் திறமையுடன் சங்கத்தின் அத்திவாரத்தை நிறுவினோம். கடந்த சில ஆண்டுகளாக தயாநிதி அக்கா என்னுடன் இரவு 10 மணிக்கு மேல் 2 நாட்களுக்கு ஒரு தடவையாவது பேசுவார்.

அவர் காடாறு மாதம், நாடாறு மாதம் என்பது போல் (வெளிநாடு 6 மாதம் – சொந்த ஊர் 6 மாதம்), பிள்ளைகளைச் சந்திக்க வெளிநாடு சென்று விடுவார். திரும்பியதும் முதல் நாளே என்னைத் தொலைபேசியில் அழைப்பார். பத்தும் பலதும் பேசுவோம். என் சொந்த அக்காவுக்கும் தயாநிதி அக்காவுக்கும் ஒரே வயது இருவரும் ஒரே ஆண்டில் ஒரே மாதத்தில் பிறந்தார்கள் – திகதிதான் வித்தியாசம்.

தயாநிதி அக்கா சங்கத்துடன் எவ்வாறு ஆரம்ப நாளிலிருந்து தொடர்பு கொண்டிருந்தாரோ அது போல் கல்லூரியுடனும் அது ஸ்தாபிக்கப்பட்ட 1943இல் இருந்து S.S.C (1949) வரை தொடர்பு கொண்டிருந்த மாணவி. அது மட்டுமல்ல H.S.C வகுப்பை ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தியவர்களில் அவரும் ஒருவர். அதன் பயனாக H.S.C வகுப்பில் படித்து 1953இல் பல்கலைக் கழகம் சென்ற முதல் மாணவி. தொடக்க வகுப்பில் இருந்து தொடர்ந்து எம் கல்லூரியில் கற்று பல்கலைக் கழகத்திற்கு முதன் முதலாக அனுமதி பெற்ற பெருமை அவருக்கு உரியது. 1957இல் அவர் ஒரு கலைப்பட்டதாரி. 1960இல் பேராதனை பல்கலைக் கழகத்தில் உதவிப் புவியியல் விரிவுரையாளராக இருந்த திரு S. செல்வநாயகம் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இருவரும் காதல் திருமணம்தான் செய்து கொண்டார்கள் என்பதை ஊகிப்பது கடினமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணதிதிற்கு முன்பாகவே 1958இல் அவர் கேகாலை St. Mary's கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். 1958 தொடக்கம் 1961 வரை அங்கு கடமையாற்றினார். அந்தக் காலப்பகுதியில் அவரிடம் கல்வி பயின்ற மாணவர்தான் புரவலர் ஹாஷிம் உமர் – தன் ஆசிரியையின் அழகுத் தோற்றத்தையும், திறமையாக அவர் தனக்குக் கற்பித்த பாங்கினையும் பகிரங்கமாக நினைவு கூறும் ஒரு விசுவாசமான மாணவர். இதனால் இன்றைய நிகழ்வுக்கு யாரைப் பிரதம அதிதியாக அழைப்பது என்று சங்கச் செயற்குழு ஆராய்ந்த சமயம் நான் உமர் அவர்களின் பெயரைப் பிரேரித்தேன். முதற் தடைவ நான் சங்கச் சார்பில் அவரிடம் சில ஆண்டுகளின் முன்னர் நன்கொடை கேட்டு திருமதி. செல்வநாயகத்துடன் சென்ற சமயம் அவர், அவரைப் பார்த்து ஆச்சரியமாக நீங்கள் செல்வி. பொன்னையாதானே என்றார். Teacher Student ஐ அடையாளம் காணவில்லை. Student, Teacher ஐ உடனே அடையாளம் காண்டார்.

இனி தயாநிதி அக்கா St. Mary's கல்லூரியில் இருந்து இராமநாதன் கல்லூரியில் கற்பிக்கச் சென்றார். அச்சமயம் செல்வநாயகம் அவர்கள் Ph.D செய்ய லண்டன் சென்றார். இராமநாதன் கல்லூரியில் செல்வநாயகத்திடம் கல்வி கற்ற மற்றுமொரு மாணவிதான் இன்று கௌரவ விருந்தினராக வந்துள்ள திருமதி. பிரகதா தில்லைநடராஜன்.

பின்னர் கட்டுகெல்ல மிஷன் மஹா வித்தியாலாயத்தில் 11 ஆண்டுகள் ஆசிரிய பணியில் இருந்து 1974இல் ஓய்வு பெற்றார். ஆனால் அவரது கல்விப்பணி சம்பியாவில் தொடர்ந்தது. கணவர் அங்கு அகமது பெல்லோ பல்கலைக் கழகத்தில் கடமையாற்றினார். சம்பியா பெண்கள் ஆசிரியர் கல்லூரியில் தயாநிதி அக்கா கடமை புரிந்தார்.

திரு செல்வநாயகத்திற்கு யாழ் பல்கலைக் கழகம் அழைப்பு விடுத்தது. 1977இல் பல்கலைக் கழகத்தின் முதல் புவியியல் பாடப் பேராசிரியராக அவர் பதவி ஏற்றார். வெளிநாட்டில் நல்ல சம்பளத்தில் இருந்த வேலையைத் தூக்கி ஏறிந்து விட்டுத் தமது பிறந்த மண்ணுக்குச் சேவை செய்ய செல்வா இங்கு வந்தார். மனைவியும் திரும்பினார். ஆனால் காலன் கணவரை 2 ஆண்டுகளின் பின்னர் அதுவும் ஒரு பயங்கர விபத்தில் பறித்து விட்டான். யாழ் பல்கலைக் கழகத்தில் தாய் மொழி மூலம் போதனைகள் தொடங்கப்பட்ட போது, புவியியலை தாய் மொழியில் கற்பிக்க செல்வா முன்னின்றார். கிராமப் பிரதேசங்களில் விவசாய வளர்ச்சி கருதி அவர் ஆற்றிய ஆய்வுகள் பிரசித்தமானவை. செல்வநாயகம் அவர்களின் வாழ்க்கை ஒரு முன்னுதாரணம். அறிவுத்துறை முதல் அகத்துறை வரை செய்வன திருந்தச் செய் என்று வாழ்ந்த ஒரு உத்தமராக பேராசிரியர் சா.சிவத்தம்பி அவர் பற்றிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாநிதி அக்காவுக்கு அவரது கணவரின் மறைவு ஒரு பேரிடி. ஆனால் அவர் தளர்ந்து விடவில்லை. பாதிகட்டி முடிக்கப்பட்டிருந்த புது வீட்டினை முழுமையாகக்கட்டி முடித்தார். அச்சமயம் அவரது மூத்த மகனுக்கு 18 வயது, இரண்டாவது மகனுக்கு 15 வயது, மூன்றாவது மகனுக்கு 13 வயது, கடைசி மகளுக்கு 10 வயது, தொழிலை மீண்டும் தொடங்கினார். யாழ் பல்கலைக் கழகத்தில் 1979இல் ஆங்கிலப் போதனாசிரியரானார். 1990 வரை இப்பணியை மேற்கொண்டார்.

மூத்த மகன் நிரஞ்சன் கண்டி Trinity யிலும் பின்னர் கொழும்பு றோயலிலும் கல்வி கற்று, கொழும்பு மருத்துவக் கல்லூரி சென்று 1st class in Medicine, Surgery, Obstetrics & Gynecology - வெளிநாட்டில் இப்பொழுது நியூயோர்க்கில் Assistant Professor of Medicine State University - Director Internal Medicine Residency Programme, Director Non Invasive Cardiology, Associate Chair for Education. அவர் M.D. FCCP, FACL பட்டங்களைப் பெற்றவர்.

நிர்மலன் – இரண்டாவது புதல்வர் – U.K யில் Accountancy படிப்பு மேற்கொண்டிருந்த சமயம் 1986இல் அகால மரணமானார்.

3வது புதல்வர் நிர்த்தனன் M.B.B.S. கொழும்பு மருத்துவக் கல்லூரியில் 1995இல் பட்டம் பெற்றவர். Pharmacology யில் Ph.D. பட்டம் பெற்றவர். சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் Life Science பற்றி அவர் எழுதிய Thesis க்கு CHUA Toh Hua தங்கப் பதக்கம் கிடைத்தது. இப்பொழுது சிங்கப்பூரில் National Neuro Science Inst. Neuro Pharmacology - பிரிவின் தலைவர்.

மகள் நிருத்திகா சிவானந்தன் B.Sc. Accounting - Boston Massachusetts பல்கலைக் கழகத்தில் படித்து கடந்த ஆண்டு இப்பட்டம் பெற்றார். இப்பொழுது தொழில் புரிகின்றார். அவரது கணவர் (தயாநிதி அக்காவின் மருமகன்) திரு சிவானந்தன் ஒரு Research Scientist ஏவுகணை Air Trafficking தொடர்பான உயர் பதவி – U.S.A. யில் M.Sc, University of Connective Ph.D - Massachusetts பல்கலைக் கழகம்.

இரு மருமகள்மார் பற்றியும் – மூத்த மருமகள் யசோதா நிரஞ்சன் Oncologist Haematologist நியூயோர்க்கின் பிரபல ஆஸ்பத்திரி ஒன்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைப் பேராசிரியர். 2வது மருமகள் பத்மினி நிர்த்தனன் இலங்கை M.B.B.S. Community Medicine M.Sc. - Clinical Sciences - சிங்கப்பூர் National University. – பிள்ளைகளின் கல்விக்கு தயாநிதி அக்காவின் பங்களிப்பு அளப்பரியது. தயாநிதி அக்காவுக்கு 3 பேரப் பிள்ளைகள் உள்ளனர்.

மாணவர்களுடன் பழகும் விதம் அவருக்கு பலரது அபிமானமும் கிடைக்க வகை செய்தது. எங்களுடன் தெருவில் செல்லும் போது அவரைத் தெரிந்தவர்கள் பலராக இருப்பர். அவர்களிடம் என்னை ஒரு பிரபலமானவர் என்று அவர் அறிமுகம் செய்ய முற்படுவார் – ஆனால் என்னைப் பார்க்கிலும் அவர் இப்பொழுது உயர் நிலையில் இருக்கும் பலர் மத்தியிலும் மிகப் பிரபலமானவர் என்பதை என்னால் அறிய முடிந்துள்ளது. காலங்காலமாக ஆசிரியர் மாணவர் உறவு தொடரும். ஊடகவியலாளருக்கும் நேயருக்கும் உள்ள தொடர்பைப் பார்க்கிலும் இது வலுவானது.

கண்டி முஸ்லிம் பாடசாலையில் வசதி குறைந்த மாணவர்களுக்கு, Market க்கும் போய் பெற்றோரிடம் மாணவர் பற்றி உரையாடினார். University யில் Spoken English கற்ற மாணவர்கள் பலர் இன்று வெளிநாடுகளில் வேலை பார்க்கிறார்கள்.

தயாநிதி செல்வநாயகம் அவர்களின் கல்விப் பணி, தாய்மைப் பொறுப்பு, எமது சங்கத்தை ஸ்தாபித்து வளர்ப்பதில் அவரது பங்களிப்பு ஆகியவற்றுக்காக இன்று நாம் அவரைச் சிறந்த பெண்மணியாக கௌரவித்து பெருமைப்படுகிறோம்.

Subject: Brain - Blood clot - Please read

You could save a life.

STROKE: Remember The 1st Three Letters... S.T.R

My friend sent this to me and encouraged me to post it and spread the word. I agree. If everyone can remember something this simple, we could save some folks.

STROKE IDENTIFICATION:

During a party, a friend stumbled and took a little fall - she assured everyone

→ page 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க உபதலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் உரை

கல்லூரியின் புகழ் பூத்த மாணவி திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்களே, எமது சங்கத் தலைவி அவர்களே, பிரதம விருந்தினர் புரவலர் ஹாஷிம் உமர் அவர்களே, திருமதி பிரகதா தில்லைநடராஜன் அவர்களே, சமூக ஜோதி எம். ஏ ரபீக் அவர்களே, பெரியோர்களே, சகோதரிகளே, குழந்தைகளே உங்கள் எல்லோருக்கும் எனது மாலை வந்தனங்கள்.

இன்று சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு எமது கல்லூரியின் புகழ் பூத்த மாணவியும் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், கொழும்பு, செயலாளருமான திருமதி தயாநிதி செல்வநாயகம் அவர்களைச் சிறந்த பெண்மணியாகப் பாராட்டிக் கௌரவிக்கக் கூடி இருக்கிறோம்.

இவரது இளைய சகோதரி கல்லூரியின் 4ஆம் வகுப்பு முதல் எனது சகமாணவியாக இருந்தவர். எனது சகமாணவியின் சகோதரி என்ற விதத்தில் தான் கல்லூரியில் இவரை எனக்கு முதன் முதலில் தெரியும். அன்று மாணவ தலைவியான தயாநிதி அக்காவை அவருடைய நடையுடை பாவனை முதலி யவற்றைப் பார்த்து நாம் வியப்பதுண்டு.

அதன் பின் எமது பழைய மாணவியர் சங்கம், கொழும்பு, ஆரம்பித்த பின்தான் அவருடன் நெருங்கிப் பழகி அவரைப் பற்றி நன்றாக அறியக் கூடியதாக இருந்தது. எமது சங்கம் உருவாவதற்குக் காரண கர்த்தா தயாநிதி அக்காவேயாகும்.

இவரிடம் நான் கண்ட சிறந்த பண்பு – இவர் சகலரிடமும் மிகுந்த அன்பையும் ஆதரவையும் காட்டுபவராக இருந்தார். இனிமையாகப் பழகுவார். இவர் யாரிடமும் கடுஞ்சொல் பேசி நான் கண்டதேயில்லை.

> முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி – அகத்தானாம்
> இன் சொலினதே அறம்.
>
> அல்லவை தேய அறம் பெருகும் – நல்லவை
> நாடி இனிய சொலின்.

என்ற திருக்குறளுக்கு இலக்கியமாக இவரைக் கொள்ளலாம்.

நாம் செய்யும் கருமங்களில் பிழைகண்டால் இனிய முறையில் அவற்றைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சுட்டிக் காட்டி எங்களைத் திருத்துவதற்கு என்றும் தவறியதில்லை. இவரது இப்பண்பினால் பயனடைந்தவருள் ஒருவராக நான் இருப்பதால் இதனை நான் வலியுறுத்திக் கூறுகிறேன்.

இவர் ஆசிரியராக இருந்த போதும் அவர் வகுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவருக்கும் தாயாக இருந்திருக்கிறார் என்பதை அவருடைய மாணவரின் பேச்சிலிருந்து நாம் அறியலாம். இவர் Acting ஆசிரியராக ஒரு வகுப்புக்குப் பாடம் எடுத்தாலும் இவரே தமக்கு ஆசிரியராக வரமாட்டாரா என்று மாணவர்கள் ஏங்குவது எமக்குத் தெரியும். அப்படிப்பட்ட சிறந்த ஆசிரியர்.

இவர் சிறந்த ஆசிரியர் என்பதற்கு மேடையில் அமர்ந்திருக்கும் அவருடைய மாணவப் பெரியோர்களே மிகச் சிறந்த சான்றாகும்.

எமது தயாநிதி அக்கா இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து எமது சமூகத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்ய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அமர்கிறேன்.

Page 22 ←




→ Page 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க செயற்குழு உறுப்பினர் திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதனின் உரை

ஒருவரை உருவாக்குவது அவர் சந்திக்கும் மனிதர்களும், அவர் வாசிக்கும் புத்தகங்களுமே ஆகும்.

என்னை உருவாக்கியவர்களில் வடிவமைத்தவர்களில் திருமதி செல்வநாயகம் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். எனது ஆளுமையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியவர்.

நாம் மாணவர்களாக இருக்கும் போது ஆசிரியர்களிடம் பாடங்களை கற்பது மட்டும் அல்ல, அவர்களின் நடை உடை, பழக்க வழக்கங்களையும் பின்பற்றுகின்றோம்.

நான் திருமதி செல்வநாயகம் அவர்களிடம் இருந்து பல்கலைக்கழகக் காலத்திலிருந்தே கற்றுக் கொண்டவை பல. முக்கியமாக நேர்த்தியாக உடை அணிதல். (Dress Sense) இந்த Global World இல் Dress for Success. அதற்கு வழிகாட்டி அவர்தான். சிறுவயதில் இருந்தே அழகாக உடை அணிபவர்களுடன் ஒட்டிக்கொள்ளும் பழக்கம் என்னிடம் உண்டு. பல்கலைக்கழகத்தில் திருமதி செல்வநாயகம் மிகவும் நேர்த்தியாக சேலை அணிந்து அழகாக Smart ஆக நடந்து வருவார்.

எப்போதும் கலகலப்பாக நகைச்சுவையுடன் பேசுவார். எவரையும் பார்த்த உடன் புன்னகைக்கும் பண்புள்ளவர். இப்புன்னகைக்குப் பின் பல சோகங்கள் மறைக்கப்பட்டுள்ளது என்பதை அக்காலத்தில் சகமாணவிகள் மூலம் அறிந்துள்ளேன்.

இச்சோகங்களால் மூலையில் முடங்கிவிடாமல் தன்னம்பிக்கையுடன், புன்னகையுடன் வளைய வருவார். அந்தத் தன்னம்பிக்கையையும் நான் கற்றது அவரிடமிருந்துதான்.

திருமதி செல்வநாயகத்திடம் பழகும் போது பயம், கூச்சம், உசத்தல் இல்லாமல் சகஜமாக பழக முடிவதால், ஆசிரியர் என்பதற்கு மேலாக நட்பாக பழக முடிவதால், இன்னும் சிறிது நேரம் பேசமாட்டாரா என்ற எண்ணத்தை ஏற்படுத்துபவர்.

ஒரு சிறந்த அனுபவம் உள்ள ஒருவருடன் உரையாடுவது ஒரு சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்தை வாசித்த திருப்தியை ஏற்படுத்தும் அல்லவா? அப்படி ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்துபவர். நெருக்கடியான நேரங்களில் சிறந்த ஆலோசகர். நான் அவரைப் பின்பற்றியதில் மிகமுக்கிய இரண்டு விடயங்களில் வெற்றியடைந்துள்ளேன் என்றே கூறவேண்டும்.

1) எனக்கு ஒரு சிறந்த வேலை கிடைத்தமை. நான் தெரிவு செய்யப்பட்டமைக்கு எனது பட்டம் மட்டும் அல்ல, Dress Sense உம் தன்னம்பிக்கையும் முக்கிய காரணம். அதை நான் கற்றது திருமதி செல்வநாயகம் அவர்களிடம்தான்.

2) இலகுவாக ஒரு பல்மருத்துவரை கரம் பற்றியமை. அதற்கும் Dress Sense தான் காரணம். Smart ஆக Dress பண்ணுவதுதான். Too Smart தான் தமக்குப் பிடிக்கிறது என பல்மருத்துவரே கூறுவார்.

எல்லாப் புகழும் திருமதி செல்வநாயகம் அவர்களுக்கே!

திருமதி செல்வநாயகம் பல்லாண்டு வாழ வரம் வேண்டும் இறைவா என இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்.

எத்தனையோ பேர் அவரிடம் கற்றிருக்கின்றார்கள். எல்லோருக்குமே அவர் சிறந்த வழிகாட்டியாக இருந்தும், எனக்கு அவரின் பாராட்டு விழாவில் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமை மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

நன்றி

வணக்கம்

Page 24 ←

that she was fine and just tripped over a brick because of her new shoes. (They offered to call ambulance)

They got her cleaned up and got her a new plate of food - while she appeared a bit shaken up, Ingrid went about enjoying herself the rest of the evening.

Ingrid's husband called later telling everyone that his wife had been taken to the hospital - (At 6:00pm, Ingrid passed away.)

→ Page 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பியின் உரை

மதிப்பிற்குரிய சங்கத்தலைவிக்கும், பிரதம அதிதி புரவலர் ஹாஷிம் உமர், கௌரவ விருந்தினர் திருமதி பிரகதா தில்லைநடராஜன் அவர்கட்கும், மேடையில் வீற்றிருக்கும் அன்பிற்குரிய பேச்சாளர் அனைவருக்கும் சபையோருக்கும் அன்பு வணக்கம்.

இன்று சர்வதேச மகளிர் தினம். இத்தினத்தை நமது இந்து மகளிர் கல்லூரியின், பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு கொண்டாடுகிறது. இங்கு ஒரு சிறந்த பேச்சாளராக நான் வரவில்லை. இந்த விழாவின் கதாநாயகியாக விளங்கும் திருமதி தயாநிதி செல்வநாயகத்துடன் 55 வருடங்களாக இருந்து வருகின்ற நட்பின் காரணமாக சில வார்த்தைகள் பேச முன்வந்துள்ளேன்.

இங்கு வந்ததின் பின்தான் உங்கள் பிரதம அதிதியும், கௌரவ விருந்தினரும் பாராட்டு விழாவில் உரையாற்ற வந்துள்ள சிலரும் திருமதி செல்வநாயகத்தின் பழைய மாணவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

"தம்மில் தம்மக்கள் அறிவுடைமை – மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது" –இது நமது

திருக்குறள்.

இங்கு மக்கள் என்னும் போது பெற்றால்தான் பிள்ளையென்று இல்லை; ஒரு ஆசிரியரிடம் கல்வி கற்கும் எல்லா மாணவர்களும், அவ்வாசிரியரது பிள்ளைகள் ஆவர். ஆசிரியர் தான் கற்பிக்கும்போது மாணவர்களை பலவிதமாக உருட்டிப்புரட்டி ஒரு சிறந்த பிரஜையாக்க முயற்சிக்கின்றார். அப்படியான முயற்சியின் பலனாக தன்னுடைய மாணவர்கள் பிற்காலத்தில் நற்பிரஜைகளாக, சிறந்த கல்விமான்களாக, நல்ல அந்தஸ்தில் இருப்பதைக் காணும்போது ஆசிரியர் மகிழ்ச்சி அடைகிறார், பெருமைப்படுகிறார். அந்த வகையில் பார்க்கும் போது திருமதி தயாநிதி செல்வநாயகம் ஒரு சிறந்த ஆசிரியையாக விளங்கியுள்ளார் என்பது புலனாகின்றது.

அடுத்து இவர் ஒரு சிறந்த தாயாக விளங்குகிறார். இவரது பிள்ளைகளை எடுத்துக் கொண்டால்

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை – அறிவுடைய
மக்கட் பேறல்ல பிற"

அவையத்து முந்தியிருக்கச் செயல் தந்தையின் கடன் என்கிறார் வள்ளுவர். ஆனால் சிறுவயதிலேயே தந்தையை இழந்த தன் பிள்ளைகளை இவர் தாயாக மாத்திரம் நின்றுவிடாது, தந்தையின் ஸ்தானத்திலுமிருந்து கல்வியூட்டி சிறந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளார். பிள்ளைகள் இருவர் வைத்தியக் கலாநிதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் பெற்று, "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற வாக்கிற்கிணங்க ஒருவர் அமெரிக்காவிலும், மற்றவர் சிங்கப்பூரிலும் சிறந்த சேவை ஆற்றுகிறார்கள். இது திருமதி செல்வநாயகத்தின் அயராத உழைப்பை எடுத்துக் காட்டுகிறது.

இவரது தனிப்பட்ட வாழ்க்கையை எடுத்துப் பார்ப்போமானால், 1952இல் இருந்து எங்களிடையே ஆரம்பித்த கல்லூரித் தொடர்பு பல்கலைக்கழகம் வரை தொடர்ந்தது. இக்காலத்தில் நாம் எங்கு சென்றாலும் ஒன்றாகக்கூடிச் செல்வோம். யாழ்ப்பாணம் இருந்து பேராதனை வந்து போவதாயிருந்தாலும் சரி, விரிவுரைகளுக்குச் செல்வதாயிருந்தாலும் சரி, கோவில், பூங்காவென்று, எங்கு செல்வதாயிருந்தாலும் சரி ஒன்றாகவே போவது வருவது வழக்கம். அடுத்து இவருடைய குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட நன்மை, தீமை இரண்டிலும் தவறாது பங்குபற்றியுள்ளேன். இந்த 55 வருட காலங்களில் எங்களுக்கிடையே எந்த விதமான தப்பபிப்பிராயமோ, சச்சரவோ, வாக்குவாதமோ ஏற்பட்டது கிடையாது.

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பொழுது இவரது காதல் வாழ்க்கை ஆரம்பித்தது. அதை ஒரு காதல் காவியம் என்றே கூறவேண்டும். இவர்களது காதல் வாழ்க்கை மிகுந்த கரடுமுரடான பாதையில் செல்ல வேண்டியதாயிற்று, இருந்தாலும் துணிந்து நின்று தம் இல்லற வாழ்க்கையை ஆரம்பித்தனர்.

பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்ததும், கணவர் பேராதனை பல்கலைக்கழகத்திலும், திருமதி செல்வநாயகம் கண்டியில் ஒரு பிரபல கல்லூரியிலும் சேவையாற்றினர். இவர்களது மாணாக்கர்கள் இலங்கையில் மாத்திரமன்றி உலகில் பல்வேறு நாடுகளிலும் சிறந்து விளங்குகின்றனர். சிறிது காலம் உயர்கல்விக்காக வெளிநாடு சென்றபோதும் அங்கு திறம்படச் சேவை செய்தனர், ஆனால் தம் தாய் நாட்டை மறந்து விடவில்லை திரு. செல்வநாயகம் தாம் பிறந்த மண்ணில் சேவை செய்ய வேண்டும் என்ற நாட்டுப்பற்றினால் திரும்பி வந்து யாழ். பல்கலைக்கழகத்தில் முதல் புவியியல் பேராசிரியராக கடமையாற்றினார். துர்அதிர்ஷ்டவசமாக நடக்கக் கூடாதது நடந்தது. யாழ் மக்கள் ஒரு சிறந்த பேராசிரியரை இழந்தனர். தயாநிதி தனது உத்தம கணவரை இழந்தார். பிள்ளைகள் அன்புக்குரிய தந்தையை இழந்தனர். அடுத்தடுத்து துன்பகரமான நிகழ்வுகள் தொடர்ந்தன, இருந்தாலும் திருமதி செல்வநாயகம் "எதையும் தாங்கும் இதயம் உண்டு" என்ற மன வலிமையோடு தன் காலத்தைக் கழித்து வருகிறார்.

இத்துன்பகரமான சூழலிலும் அவர் தனது கல்லூரியை மறக்கவில்லை. தனது கல்லூரியாகிய யாழ். இந்து மகளிர் கல்லூரியின் கொழும்புக் கிளையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னின்று ஆரம்பித்தார். இக்கிளையின் செயலாளராக, தலைவியாக, உபதலைவியாக பல்வேறு பதவிகளிலிருந்து சேவை செய்கிறார். கல்லூரியை விட்டுவிலகி இத்தனை ஆண்டுகள் கடந்தும் கல்லூரியுடனான தொடர்பை இன்னமும் துண்டிக்கவில்லை. இது அவரது செய்நன்றி மறவாத தயாள குணத்தைக் காட்டுகின்றது. திருமதி செல்வநாயகம் நல்ல தேக சுகத்தோடு இருந்து தனது கல்லூரியின் வளர்ச்சிக்காக மேன்மேலும் உழைக்கவேண்டுமென்று இறைவனை வேண்டுவோமாக.

நன்றி.

*திருமதி பரமேஸ்வரி மகேசன்*
*700/79 பெரேரா மாவத்தை*
*தளவத்து கொட.*

Page 26 ←

She had suffered a stroke at the party. Had they known how to identify the signs of a stroke, perhaps Ingrid would be with us today.

Some don't die. They end up in a helpless, hopeless condition instead. It only takes a minute to read this...

STROKE IDENTIFICATION:

A neurologist says that if he can get to a stroke victim within 3 hours he can totally reverse the effects of a stroke...totally. He said the trick was getting a stroke recognized, diagnosed, and then getting the patient medically cared for within 3 hours, which is tough.

RECOGNIZING A STROKE

Remember the "3" steps, 'STR'. Read and Learn!

Sometimes symptoms of a stroke are difficult to identify. Unfortunately, the lack of awareness spells disaster.

The stroke victim may suffer severe brain damage when people nearby fail to recognize the symptoms of a stroke.

→ Page 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*08-03-2007*

# திருமதி தயாநிதி செல்வநாயகத்தின்

# ஏற்புரை

இங்கு குழுமியிருக்கும் அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்.

இந்தமேடையில் இன்று பலரும் பல்வேறு விதமாக என்னைப் புகழ்ந்து கூறினார்கள். அந்தப் பாராட்டுக்களை நான் பெருமிதத்துடனும், பேருவகையுடனும் ஏற்றுக் கொள்ளுகின்றேன். மிக்க நன்றி.

கல்லூரியில் கல்விகற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியிலும் பார்க்க இன்று பத்து மடங்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் அடைந்துள்ளேன். இப்படி ஒரு விழா நடத்த வேண்டும் என்று தீர்மானிப்பதற்கு காரண கர்த்தாவாக இருந்தவர் செல்வி சற்சொரூபவதி நாதன். அவரது சகோதரி திருமதி இரத்னாவதி திருச்செல்வம் எனக்கு ஒரு பெருவிழா எடுக்க வேண்டுமென்று அடிக்கடி நினைவூட்டியதாக அறிந்தேன். இவர்கள் இருவரும் எனக்கு மிகவும் நெருக்கமானவர்கள். அநேகமாக இரவு வேளைகளில் தொலைபேசியில் கருத்துப் பரிமாற்றஞ் செய்வேன். எனது தனிமையைப் போக்குவதற்கு இவர்களது நட்பு பெரிதும் உதவியது.

சற்சொரூபவதியின் தீர்மானத்தை, எமது சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணரும், ஆற்றலும் செயற்றிறனும் ஒருங்கே அமையப்பெற்ற உபதலைவிகளான செல்வி சற்சொரூபவதி நாதனும், திருமதி அபிராமி கயிலாசபிள்ளையும், திருமதி பரமேஸ்வரி பாலசிங்கமும், ஏனைய செயற்குழு அங்கத்தவர்களும், ஏகமனதாக ஏற்றுக் கொண்டு, முழுமனதுடன் செயலாற்றத் தொடங்கினர். நான் அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

எமது கல்லூரியின் 'பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு' 1993ஆம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 21ந் திகதி சம்பிரதாய முறைப்படி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இச்சங்கம் உதயமாவதற்கு உறுதுணையாக முன்னின்று உழைத்தவர், எமது சங்கத்தின் போஷகராக இருந்த அமரர் திருமதி புஷ்பம் சுப்பிரமணியம் ஆவார். அவரை நான் இன்று நன்றியுணர்வுடன் நினைவு கூருகிறேன். அவர் பல இடங்களுக்கு என்னையும் அழைத்துச் சென்று பழைய மாணவிகளைச் சந்தித்து, ஆரம்பத்தில் ஒரு சில பழைய மாணவிகளை ஒன்று கூடவைத்து, எம்மை ஊக்குவித்ததன் விளைவாகவே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சங்கம் இன்று ஏறத்தாழ 100 அங்கத்தவர்கள் கொண்டுள்ள உயிர்த்துடிப்புள்ள சங்கமாக செயற்பட்டு வருகின்றது.
1993ஆம் ஆண்டு கொழும்பில் வாழும் பழைய மாணவிகளை ஒன்று சேர்த்து 'பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு' தாபிப்பதற்காகத் தினகரன் பத்திரிகையில் விளம்பரம் செய்தோம். இந்த வேளையில் எங்களுக்குப் பல வழிகளில் உதவியவர், எனது குடும்ப நண்பரும், பேராதனைப் பல்கலைக்கழக சகமாணவரும், தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான, அமரர் சிவகுருநாதன் அவர்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பத்திரிகை விளம்பரத்தைப் படித்ததும், மறுநாளே என்னுடன் தொடர்பு கொண்டவர் சற்சொரூபவதி நாதன். அவரது தொடர்பு ஏற்பட்டதும் அவர்தான் எம்மையெல்லாம் வழிநடத்தி எமது சங்கத்தை வளர்ச்சியடையச் செய்யும் சக்தியும், ஆற்றலும் படைத்தவர் என்று முடிவு செய்தோம். அவரே பழைய மாணவிகள் சங்கத் தலைவியாகப் பல வருடங்களாகக் கடமை யாற்றி எம்மை வழி நடத்தினார்.

நானும் பொதுச்செயலாளர் பதவியை ஏற்று அவருடன் சேர்ந்து அரிய பணிகளை ஆற்றி இச்சங்கத்தை நிலைநிறுத்தினோம் என்ற உண்மையை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1958ஆம் ஆண்டு முதல் முதலாக ஆசிரியத் தொழிலைக் கேகாலை, St, Mary's College இல் கடமையேற்ற பொழுது, ஐந்தாம் வகுப்பு மாணவனாக என்னிடம் கல்வி பயின்ற புரவலர் ஹாஷிம் உமர் அவர்களையே இன்று இந்த விழாவிற்கு பிரதம அதிதியாக வரவழைத்த சற்சொரூபவதிக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். நான் ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு கல்வி கற்பித்த பொழுதும், மூன்று ஆண்டுகள் மாத்திரமே என்னிடம் கல்வி பயின்ற ஹாஷிம் உமர் அவர்கள் இன்று சமுதாயத்தில் ஒரு உன்னத நிலையில் இருக்கின்ற போதிலும், அவர் பல ஊடகங்களில் முக்கியமாகத் தொலைக்காட்சி நேர்காணல் பேட்டிகளில், பகிரங்கமாக "என்னுடைய ஆசிரியர்" திருமதி செல்வநாயகம் என்று கூறி முழு அன்பையும் வெளிப்படுத்தி என்னையும் புகழ்ந்து பேசுவதை நான் பல தடவை கேட்டிருக்கின்றேன்.

பல ஆண்டுகளுக்குப் பின் 1999ஆம் ஆண்டு, எமது சங்கத்தின் கலை நிகழ்வு ஒன்றிற்கு அன்பளிப்பு கேட்பதற்கு அபிராமி கயிலாசபிள்ளையும், சற்சொரூபவதி நாதனும், நானும் அவரது காரியாலயத்திற்குச் சென்ற போது ஒருசில நிமிடங்கள் எங்களுடன் பேசிவிட்டு, ஆச்சரியத்தோடு, தான் அணிந்திருந்த மூக்குக் கண்ணாடியை உயர்த்தி "நீங்கள் செல்வி. பொன்னையா தானே" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார். நான் அவரை அடையாளங் காணவில்லை. சின்ன வயதில் நான் பார்த்த தோற்றம் இன்று இல்லை. ஆனால் அவரோ என்னை இந்த வயதிலும் அடையாளம் கண்டு கொண்டு மகிழ்ச்சியுடன் உரையாடினார். அவரது மனதில் ஆசிரியையாக நான் தடம் பதித்திருப்பதைக் கண்டு மனம் பூரித்துப்போனேன். அவரே இந்த வைபவத்திற்கு பிரதம அதிதியாக வந்தமையையிட்டு பெருமைப்படுகின்றேன்.

அடுத்து கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட பிரகதா தில்லைநடராஜன், எனது பாசத்திற்கும் அபிமானத்திற்குமுரிய மாணவி. 1961ஆம் ஆண்டு தொடக்கம் 1963ஆம் ஆண்டு வரையுமுள்ள காலப்பகுதியில் சுன்னாகம், இராமநாதன் கல்லூரியில் என்னிடம் அவர் கல்வி கற்ற நாளிலிருந்து இன்று வரையும் தனது தாய்போல் என்மீது அன்பைப் பொழிந்து கொண்டேயிருக்கின்றார். வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு தலை சிறந்த மாணவி. இம்மேடையில் தொடர்ந்து உரையாற்றிய எனது அன்புச் சகோதரிகளையும் மற்றும் பின்னணியில் இருந்து கொண்டு பல்வேறு காத்திரமான உதவிகளைப் புரிந்த மற்றைய சகோதரிகளைப் பற்றியும் நான் புகழ வேண்டிய அவசியமே இல்லை. நான் தனிமையில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், அவர்கள் என்மீது காட்டும் அன்பும், பரிவும், மரியாதையும் பக்கபலமாக இருக்கிறது என்று கூறினால் மிகையாகாது. எமது சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் என்னை அன்புடனும் உரிமையுடனும் "தயாநிதி அக்கா" என்று அழைப்பதுண்டு. ஒவ்வொருவரும் இந்த விழாவைச் சிறப்புறச் செய்வதற்கு முழுமனத்துடன் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். அவர்களது பாசம் என்றும் எனது உள்ளத்தில் நிலைத்திருக்கும்.

யாழ். பல்கலைக்கழக பட்டதாரியான மிதிலா ஸ்ரீபத்மநாதன் என்னிடம் கல்வி பயிலாவிட்டாலும் என்மீது அவருக்கு ஒரு ஈடுபாடும், ஆழமான அன்பும், மரியாதையும் கொண்டிருப்பதைப் பார்த்து எனக்கே ஆச்சரியமாகவும் ஆனந்தமாகவும் இருக்கின்றது. இந்த வைபவத்தில் நான் பங்குபற்றுவதற்கு எல்லாவித ஆயத்தங்களையும் தானே பொறுப்பேற்று திறம்படச் செய்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் எனக்கு ஒரு பாசமுள்ள மகளாக உதவி புரிந்துள்ளார். நன்றி மிதிலா.

விழாக் குழுவினரின் அழைப்பினையும், எனது தனிப்பட்ட அழைப்பினையும் ஏற்று, பல சிரமங்களின் மத்தியிலும் இங்கு வந்து என்னைக் கௌரவித்தமைக்காக, எனது மாணவர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் யாவரையும் சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன்.

இவ்வளவு சிறப்பாக இவ்விழாவினைக் கொண்டாடும் தருணத்தில் இம்மேடையில் எனதருகில் பெருமையுடன் அமர்ந்திருக்க வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் இன்று எம்மத்தியில் இல்லாமல் இருப்பது மிகவும் கவலையை அளிக்கின்றது. எமது சங்கத்தின் போஷகராக, கல்லூரி ஆரம்பித்த காலத்திலிருந்து எனது ஆசிரியையாக, பாசமுள்ள அன்னையாக, வழிகாட்டியாக இருந்து என்னை ஒரு சிறந்த பெண்மணியாக உருவாக்கிய திருமதி லீலா நாகரத்தினம் அவர்களை பணிவன்புடன் நினைவு கூருகின்றேன்.

இவ்விழாவினை சோபிக்க வைத்தது சமூகஜோதி எம்.ஏ.ரபீக் அவர்களின் "இலக்கியப் பெண்கள்" என்ற சிறப்புரையாகும். மேலும் சோபிக்கச் செய்வதற்காக சோக்கல்லோ சண்முகம் அவர்களும், அவரது வில்லடிக் குழுவினரும் காத்திருக்கின்றனர். அவர்களின் சிறப்பான நிகழ்ச்சியை நீங்கள் கண்டுகளிக்க வேண்டும் என்று பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

இன்று இம்மேடையில் எனக்குக் கிடைத்த கௌரவமும், பாராட்டுக்களும், அமரத்துவம் அடைந்த எனது பெற்றோருக்கும், அன்போடு கல்வி புகட்டிய எனது ஆசிரியைகளுக்கும், எல்லாவற்றிலும் மேலாக, 27 வருடங்களுக்கு முன் திடீரென என்னை விட்டுப்பிரிந்த எனது அன்புக் கணவர் அமரர் பேராசிரியர் சோமசுந்தரம் செல்வநாயகத்திற்கும் சமர்ப்பணம்.

இறுதியாக சங்கத்திற்காக உழைப்பவர்களை இன்று போல் கௌரவித்து, விழாக்கள் கொண்டாடுவது வரவேற்கத்தக்க விடயம். இவ்வாறான செயல்கள் பழைய மாணவிகள் கல்லூரிக்கு ஆற்றும் காத்திரமான பங்களிப்பிற்கு சமுதாயம் கொடுக்கும் அங்கீகாரம். அவர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைகள் பற்றி இளஞ்சந்ததியினர் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. தாமும் அந்த நிலைக்கு உயரமுற்படுவார்கள் என்பதை கூறி விடை பெறுகின்றேன்.

நன்றி

வணக்கம்

Page 29 ←

Now doctors say a bystander can recognize a stroke by asking 'three simple questions':

S Ask the individual to 'SMILE'

→ Page 37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி லீலா நாகரத்தினம்

## எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஆசிரியை, உபஅதிபர், சங்கப்போஷகர்

எங்கள் சங்கம் நடத்தும் ஒவ்வொரு நிகழ்விற்கும் வந்து எங்களுக்கு ஆசிகூறும் எங்கள் மதிப்பிற்குரிய ஆசிரியையும், உப அதிபரும், சங்கப்போஷகரும் ஆகிய திருமதி லீலா நாகரத்தினம் இன்று எம்மிடையே இல்லை. இது எங்களுக்கு விலை மதிக்கமுடியாததும் ஈடு செய்ய முடியாததுமான ஒரு இழப்பாகும். காலம்தான் எங்கள் கவலையை மறக்கச் செய்யக்கூடிய ஒரே மருந்தாகும்.

திருமதி லீலா நாகரத்தினம் அவர்கள் எங்கள் கல்லூரிக்காகவே வாழந்தவர். அவர் எங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்களுள் ஒருவராவார். எங்கள் கல்லூரி தற்போதைய இடத்திற்கு வருமுன்பே அவர் கல்லூரியுடன் இணைந்து செயற்பட்டவர். கல்லூரி ஸ்தாபிக்கப்பட்ட 1943ஆம் ஆண்டு ஆசிரிய அத்தாட்சிப் பத்திரத்துடன் ஆசிரிய சேவையில் ஈடுபட்டவர். அக்காலத்தில் கல்லூரி வளாகத்தில் கல்லுப் பொறுக்கிப் புல்லுப் பிடுங்கி சுத்தம் செய்தவர்களுள் ஒருவராவார். பின்பு 1955ஆம் ஆண்டளவில் பட்டதாரிப் பட்டம் பெற்றார். 1975ஆம் ஆண்டு உப அதிபராகப் பதவியேற்றார்.

அப்போதைய அதிபராகிய செல்வி பத்மாவதி இராமநாதனுடன் இணைந்து பல வழிகளிலும் கல்லூரியை உயர்த்தினார். இவர்கள் நல்லொழுக்கத்திற்கு முதலிடம் கொடுத்து ‘ஒழுக்கமே மேன்மை கொடுக்கும்’ என்பதை தாமும் பின்பற்றி மாணவிகள் மனதிலும் ஊறச் செய்தனர். அத்துடன் மாணவிகளின் கல்வி வளர்ச்சியிலும் அதீத அக்கறை காட்டினர். ஒவ்வொரு மாணவியிலும், பிரத்தியேகக் கவனம் எடுத்து அம்மாணவி பரீட்சையில் சித்திபெற என்னதேவை என்பதை அறிந்து அத்தேவையைப் பூர்த்தி செய்து வந்தனர். இதன் பயனாக பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் மாணவிகளின் தொகையும் அதிகரித்தது.

இவ் விணைந்த ஜோடிகள் கல்வித்துறையில் மட்டுமன்றி நடனம், நாடகம், சங்கீதம், விளையாட்டு போன்ற துறைகளிலும் அதிக கவனம் எடுத்தனர். இதன் பயனாக மாணவிகள் சகல துறைகளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்து விளங்கினர். யாழ் இந்து மகளிர் கல்லூரியும் தன் புகழை அகில இலங்கையிலும் பரப்பியது.

இவர்கள் காலத்தில் புதிய காரியாலயம், ஒரு புதிய விஞ்ஞான ஆய்வுகூடம், 10 வகுப்பறைகளையும் இன்னொரு விஞ்ஞான ஆய்வுகூடத்தையும் கொண்ட மேல்மாடிக் கட்டிடம், கல்லூரி விடுதியைச் சுற்றி பாதுகாப்பான தனி மதில் ஆகியன கட்டப்பெற்றன. நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் கோயிலையும் புனருத்தாரணம் செய்து மகா கும்பாபிஷேகமும் செய்வித்தனர்.

மணிமுடி சூடிய மாமன்னர் ஆட்சிக்காலம் ஒரு நாட்டின் சரித்திரத்தில் பொற்காலமாகப் பொறிக்கப்படுவது போன்று இம்முடிசூடாச் சேவகிகளின் 'அதிபர் – உபஅதிபர்' பதவிக்காலம் யாழ் இந்து மகளிர் கல்லூரியின் சரித்திரத்தில் பொற்காலமாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

திருமதி லீலா நாகரத்தினம் 1983ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார். இவரது 41 வருடகாலச்சேவை எங்கள் கல்லூரிக்கும் இவரிடம் கல்விகற்ற மாணவிகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு ஸ்தாபிக்கப்பட்ட 1993 ஆண்டிலிருந்தே சங்கப் போஷகராக இருந்து தகுந்த அறிவுரை கூறி சங்கத்தைப் பல வழிகளிலும் முன்னேற்றினார். கனடா, சிட்னி ஆகிய இடங்களிலுள்ள பழைய மாணவிகள் சங்கங்களுடனும் மிகுந்த ஈடுபாடு உள்ளவர்.

அன்றுதொட்டு இன்றுவரை எமக்குத் துணைநின்ற எமது ஆசிரியையும், உபஅதிபரும், சங்கப்போஷகருமான திருமதி லீலா நாகரத்தினம் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு*
*திருமதி சிவகாமி அம்பலவாணர்*
*சங்கத் தலைவி*

கல்லூரியின் சிறந்த மாணவிகள்

| | |
|---|---|
| 2001 செல்வி காயத்திரி சிற்சபேசன் | 2002 செல்வி ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன் |
| 2003 செல்வி நிலக்ஷி மகாதேவா | 2004 செல்வி துளசி கந்தசாமி |
| 2005 செல்வி பாமினி பரஞ்சோதி | 2006 செல்வி கபிலினி அருட்செல்வன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mrs. Leela Nagaratnam

## An eternal pride to our Alma Mater – Jaffna / Hindu Ladies' College.

It is with profound grief that I, on behalf of J / Hindu Ladies' College – Old Girls Association – Colombo, convey my heartfelt condolence, in the form of this message of appreciation to a veteran teacher who had rendered yeoman service to our alma mater.

Mrs. Leela Nagaratnam will be remembered for ever, by all those who were associated with her for her integrity, strict discipline, and her concern for her students. To me, she means a lot. She was everything to me – a dedicated teacher – a lovable and understanding mother – a guide and a mentor right from the inception of my college life. She had a personality that was charming with dynamic life and liveliness, a disposition that was warm, friendly and at the same time a strict disciplinarian. Having had the blessing of being closely associated with such a graceful lady – my favourite teacher from the fourth grade to the tenth grade, I wish to pay my obeisance to my highly respected teacher.

J / Hindu Ladies' College was founded on the $10^{th}$ of September 1943. She was the only teacher who served on the staff continuously for forty years from the inception of the college till her retirement in 1983. She played many roles as a model teacher, Deputy Principal from 1975, Teacher in charge of the hostel at the beginning and in charge of games and sports and all other extra curricular activities. None can deny the fact that she had contributed immensely to the growth and development of our College through the noble teaching profession. Her services and valuable contributions

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

have been fruitful and our College is now one of the leading and prestigious girls' Colleges in Jaffna.

She has a wide circle of her student population all over the world. Her sudden demise will definitely be mourned by every student who had been moulded by her as a good citizen. Such a wonderful lady had been so privileged to breathe her last at her son Sureshkumar's residence in Canada.

It was just three months ago - on the 2nd of December 2006, the O.G.A. Colombo had a farewell function to Mrs. Leela Nagaratnam honouring her services. She was so cheerful and very proud to be in the midst of her own students. Three weeks after her arrival in Canada, she was hospitalised. She passed away on the 17th of February 2007 after having a chat with her daughter Sutharshini who flew from Australia to be by her mother's bedside.

We all will miss her for ever. May her soul rest in peace.

*Mrs. Dayanithi Selvanayagam*
*Secretary*
*Old Girls' Association – Colombo*
*J / Hindu Ladies' College*

Page 33 ←

T 'TALK'. Ask the person to 'SPEAK A SIMPLE SENTENCE (Coherently)' (eg "It is sunny out today").

R Ask him or her to 'RAISE' BOTH ARMS.

If he or she has trouble with ANY ONE of these tasks, call the ambulance and describe the symptoms to the dispatcher.

NOTE: Another 'sign' of a stroke is

→ Page 39

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தறிவித்த ஆசிரியைக்கு அஞ்சலி

அறிவு சால் ஆசானாய், அன்பு நிறைந்தவராய், பொறுப்புமிக்கவராய், பண்பு நிறைந்தவராய், அமைதியாக வாழ்ந்த எங்கள் ஆசிரியை திருமதி லீலா நாகரத்தினம் எம்மையெல்லாம் நன்நிலைக்கு உயர்த்திவிட்டு அமரர் அடி சேர்ந்து விட்டார்.

இவர் யாழ். இந்து மகளிர் கல்வுலூரியில் 1943 முதல் அதாவது பாடசாலை தொடங்கிய நாள் முதல் ஆசிரியராக இருந்தவர். இவரிடம் கற்ற மாணவிகள் பலர் பல்கலைக்கழகப் பட்டம் பெற்று இன்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உயர் நிலைகளில் இருப்பது அவரின் ஆசிரியைப் பணிக்கு பெருமை தருவதாகும். இவர் ஆசிரியராகப் பணி புரிந்த காலத்தில் பாடசாலை சார்ந்த பல சிக்கலான விடயங்களில் அமைதியாக இருந்து சரியான தீர்மானங்களை எடுப்பதில் வல்லவராக விளங்கினார்.

இளமைப் பருவத்திலிருந்து இறக்கும் வரை அன்னாரின் கல்வி ஆர்வமும், ஈடுபாடும் சிறிதளவும் குன்றவேயில்லை என்பது குறிப்பிடத்தக்கது. "கவிஞர்கள் பிறக்கிறார்கள்" என்பது எம்மிடையே நிலவும் பழமொழி. ஆனால் எம்மைப் பொறுத்தவரையில் கவிஞர்கள் மட்டும் அல்ல ஆசிரியர்கள் சிலரும் பிறப்பிலேயே அப்பண்பு கொண்டவர்களாக விளங்குகின்றார்கள். இதற்கமைய பிறவியிலேயே ஆசிரியருக்குரிய அனைத்துப் பண்புகளுடனும் விளங்கியவர் எங்கள் ஆசிரியை. "பணியுமாம் பெருமை" என்பதற்கமைய பல்துறையில் அவர் அறிவு பெற்றிருந்த போதிலும் என்றும் தன்னடக்கத்தோடு தான் அவர் விளங்கினார். அவரிடம் இயல்பாக எழும் புன்னகை மறக்கமுடியாத ஒரு பண்பாகும்.

இவர் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் கொழும்புச் சங்கத்துக்கு போஷகராக இருந்து எவ்வளவோ உதவிகளையும், அறிவுரைகளையும் வழங்கியவர். இவரின் இழப்பு ஈடுசெய்யமுடியாததொன்றாகும்.

பிறந்தோர் இறப்பது இயல்பு. இது இயற்கையின் கட்டளை. மரணமில்லாப்பெருவாழ்வு வேண்டிய நம் வள்ளலாரும் இறுதியில் மறைந்தார் என்று தான் வரலாறு கூறுகின்றது. இன்றிருப்பார் நாளை இல்லை என்ற பெருமை உடைத்து இவ்வுலகு என்று வாழ்க்கையின் நிலையாமையை சொற் சுருக்கத்தோடு, பொருட் பொலிவோடு, வள்ளுவர் மொழிந்துள்ளார். நிலையாமை ஒன்றுதான் நிலையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நிலைத்த பலன்களை ஆற்றி நீடு புகழ் நாட்டி வாழ்வின் நிலையாமையை நாம் வெல்லமுடியும். “எழுத்தறிவித்தவன் இறைவன்” என்பதற்கமைய பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் நெஞ்சத்திலும் அவர்கள் வழிவந்தோர் நெஞ்சத்திலும் நிலையாக இடம் பிடித்தவர் எமது ஆசிரியை. அதை எவரும் மறுக்கமுடியாது.

இவரிடம் நாங்கள் உரையாடும் போதெல்லாம் கவலை எல்லாம் போய்விடும். நேரம் போவதே தெரியாமல் இருக்கும். ஒருவருக்கும் தீங்கு செய்யாத, தீங்கு நினைக்காத, ஆடம்பரத்தை விரும்பாத ஒரு எளிய உத்தமியாக வாழ்ந்கவர் தான் எங்கள் ஆசிரியை. அவரது மறைவினால் துயருறுவோருக்கு ஆறுதல் சொல்வோர் யார்? எமக்கும் அவரது மறைவு ஒரு சூனிய வெளியை உண்டாக்கி விட்டது. பிறப்புண்டேல் இறப்புண்டு. எனவே உத்தமியாகிய எமது ஆசிரியையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*அபிராமி கயிலாசபிள்ளை*
*உபதலைவி*
*யாழ். இந்து மகளிர் கல்லூரி*
*பழைய மாணவிகள் சங்கம்*
*கொழும்பு*

Page 37 ←

1.Ask the person to 'stick' out their tongue.

2. If the tongue is 'crooked', if it goes to one side or the other that is also an indication of a stroke.

A prominent cardiologist says if everyone who gets this e-mail sends it to 10 people; you can bet that at least one life will be saved.

- and it could be your own.

*Thanks to Mr. Venkat*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புநெறி

அன்பான அமைதியான ஓர் அழகிய, அற்புதமான அறிவுச்சக்தி ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு மணித்தியாலமும் செயற்பட்டுக் கொண்டே இருக்கிறது. எங்கள் அறிவுக்கும், ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட, இந்த சக்தியே பரப்பிரமமாகும். இவரே கருணையே வடிவமான பரமேஸ்வரன் எனப்படுவார். இதுவே இந்து மத தத்துவமாகும். இந்து மதமானது, சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் ஆறு பிரிவுகளைக் கொண்டது. இப்பரமேஸ்வரனை சைவர்கள் சிவபெருமான் என அழைப்பர்.

எண்ணரிய பிறவிகளுள் மானிடப் பிறவியே மேலானது. அரிதில் கிடைத்த இந்த மானிட தேகத்தைக் கொண்டு நாங்கள் செய்ய வேண்டிய சேவைகள் பலவுள. நாம் மனம், வாக்கு, காயம் (திரிகரணம்) என்னும் மூன்றினாலும் ஒருமித்தே ஒன்றைச் செய்ய வேண்டும். அப்பொழுது தான் எங்களுடைய செயல்கள் செல்வனே செயல்படுத்தப்படும். திரிகரணங்கள் ஒருமித்து செயல்படுவதற்கு மனச்சுத்தி அவசியம். இதனை அடைவதற்கு இறைவனின் பால் அன்பு வைத்து அவரின் அருளை நினைந்து உருகி வழிபடுதலே சிறந்தவழியாகும். இவ்வழிபாட்டிற்கு சைவதிருமுறைகள் காட்டும் அன்பு நெறியே அருந்துணையாக உள்ளது.

இறைவன் எமக்கு தாயாகவும், தந்தையாகவும் விளங்குவதாக எமது சைவதிருமுறைகள் மேலும் மேலும் வலியுறுத்திக் கூறுகின்றன. "தாய்களாயினார் பல்லுயிர்க்கும்" (2–102–7) "தோன்றிய எவ்வுயிர்க்கும் துணையாய் நின்ற தாயான்" (6–50–4) "தாயானவன் உயிர்கட்கு" (1–11–5) "தாயவன் உலகுக்கு" (1–113–2) "தாயானே, தந்தையுமாகிய தன்மைகள் ஆயானே" (2–15–4) தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தையாகி" (6–42–6). அத்துடன் உயிர்க்கு உயிராகவும் விளங்குகின்றார். "உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதம் நிரை சேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்" என திருஞானசம்பந்தர் அருளியுள்ளார்.

மேலும் இறைவன் "வான் பயிரை, அப்பயிரின் வாட்டம் தீர்க்கும் துளியான்" (6–66–9) "தோன்றாத் துணையாயிருந்தனன் தன்னடியோங்களுக்கே" (4–94–1) "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் தீர்த்தருள வல்லான்" (6-54-8) "நோயிலும் பிணியும் தொழிலர், பால் நீக்கி நுழைதரு நூலினர்" (3-123-5).

இறைவனின் அன்பே எம்மையெல்லாம் ஈடேற்ற வல்லது. இறைவன் பால் அன்பு இல்லாவிட்டால் வேதம் ஓதி, வேள்வி செய்து, கோடி தீர்த்தம் ஆடினும் யாதொரு பயனும் கிட்டாது. "ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி மூடி வைத்திட்ட மூர்க்கனோடொக்குமே" (5-99-9). இதற்கு மாறாக, இறைவன்பால் அன்பு செலுத்துபவர், "புனிதனைப் பூவனூரனைப் போற்றுவார், மனிதரில் தலையான மனிதரே" (5-65-6). இறையன்பின் பயன் "பூங்கழல் தொழுதும் பரவியும், புண்ணியா, புனிதா, உன் பொற்கழல் ஈங்கு இருக்கப் பெற்றேன், என்ன குறையுடையேன்" (4-20-4). இறைவனை நினைக்காதவர் பெறும் பயன் "காருலாங்கண்டனே உன் கழலடி சேர்விலார் கட்குத் தீயவை தீயவே"(5-97-7). இறைவனின் திருவடியைச் சேரப் பெறுவோமாயின் "ஒன்றினாற் குறையுடைளோமல்லோம்"(6-98-5). எமது தீமைகள் அவரது திருவருளால் "தீமைதானும் நன்மையாய்ச் சிறப்பதே" (6-98-4).

இறைவனின் அடியார்க்கு நாம் உண்மை அடியார்களாவோமானால் "பாதிரிப் புலியூர் உடையான் அடியார் அடியோங்கட்கு அரியது உண்டோ? (4-94-3). கண்ணப்ப நாயனார் இறைச்சியை படைத்தார். சிவகோசரியார் அபசாரம் என்று அதனை அகற்றினார். இறைவன் இருவருடைய அன்பினையும் ஒரு படித்தாக ஏற்றுக் கொண்டார். பாலுக்காக அழுத "பாலனுக்காய் அன்று பாற்கடல் ஈந்து" அருளியவன் (4-107-6). "உண்டான் நஞ்சை உலகம் உய்யவே" (1-23-2). சிவன் கோயில் கொண்டுறையும் சகல சீவராசிகள் மீதும் அன்பு கொள்ள வேண்டும். தாயை இழந்த பன்றிக் குட்டிகள் பசியால் துடித்தபோது சிவனே தாயப்பன்றியுருக் கொண்டு முலைப்பால் கொடுத்தருளினார். அப்பர் சுவாமிகள் "தயாமூலதன்மம் என்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம் நலங்கொடுக்கும் நம்பி" என்று சிவபெருமானைப் போற்றுகின்றார். திருமூலர் திருமந்திரத்தில் "அன்பே சிவமாவது" எனக்குறிப்பிடுகிறார்.

சிவபரம்பொருள் எங்களுடைய மனத்துக்கு எட்டாதவர். அவர் வடிவம் முதலியவற்றிற்கு அப்பாற்பட்டவர். காண்பரிய பேரொளியாய் உள்ளவர். அவர் நீதி மயமானவர். "நீதி நின்னையல்லால் நெறி யாதும் நினைந்தறியேன்" (3-55-6) "இன்ன உரு, இன்ன நிறம் என்று அறிவதேல் அரிது, நீதி பலவும் தன்ன உருவு என மிகுத்த தவன்" (3-71-4) "பங்கயத்து அயனும் மால் அறியா நீதியே" என்று விளிக்கின்றார் மணிவாசகர். (அருட்பத்து).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் உருவம் இல்லாதவராயினும் அவரை நினைத்தற்காகவும், வணங்குவதற்காகவும் உருவம் சொல்லப்பட்டிருக்கிறது. சிவனாகவும், உமாதேவியாராகவும் வழிபடுகிறோம். விநாயகர், முருகன், விஷ்ணு, சூரியன் என்ற மூர்த்திகளாகவும் வழிபடுகிறோம்.

இறைவன் பக்குவமடைந்த ஆன்மாவை குருவடிவாக வந்து உண்மையை உணர்த்தி ஆட்கொண்டு தமது திருவடிகளில் சேர்ப்பர்.

குருஸ்துதி

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு: குருர் தேவோ மஹேச்வர: 1
குரு: சாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம: 11

பரம் பொருளின் பூரணத்துவத்தை உபநிடதம் பேசுகின்றது:

"ஓம் பூர்ணமத பூர்ண மிதம்
பூர்ணாத் பூர்ண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமா தாய
பூர்ணமேவா வதிஸ்யதே"

தோன்றாதிருக்கும் அப் பரம்பொருள் பூரணமாகவே இருக்கின்றது. பிரபஞ்சமாகவே தோன்றிய இப் பரம்பொருளும் பூரணமாகவே இருக்கின்றது. பூரணத்திலிருந்து பூரணம் தோன்றியுள்ளது. எஞ்சியுள்ளதும் பூரணமாகவே இருக்கின்றது. அதன் பூரணத்துவம் என்றுமே குறைவுபடுவதில்லை.

இவ் உயரிய கருத்தை எமது சமய குரவர்கள் இரத்தினச் சுருக்கமாக சொல்லிப் போந்தனர். "குறைவிலா நிறைவே" (2-10-4) "குறைவிலா நிறைவே, குணக் குன்றே" (7-7-6) "குறைவிலா நிறைவே கோதிலா அமுதே" (திருவாசகம் - கோயிற்றிருப்பதிகம்-5).

இறைவன் இலக்கணம், இறைவன் அன்பு இவ்வளவுதானா என்று கேட்டால் இல்லை அவை சொல்லிற்கடங்கா. சிலவே இங்கு கூறப்பெற்றுள்ளது.

*தொகுப்பு திருமதி. விமலா மணிவாசகன்.*

நன்றி :- "சைவத் திருமுறைகள் காட்டும் அறநெறி, ஆன்மீக விழுமியங்கள் சில" ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்ற வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CANCER UPDATE FROM JOHN HOPKINS HOSPITAL, U SA-

1. No plastic containers in micro.
2. No water bottles in freezer.
3. No plastic wrap in microwave.

Johns Hopkins has recently sent this out in its newsletters. This information is being circulated at Walter Reed Army Medical Center as well.

Dioxin chemicals cause cancer, especially breast cancer.

Dioxins are highly poisonous to the cells of our bodies. Don't freeze your plastic bottles with water in them as this releases dioxins from the plastic.

Recently, Dr. Edward Fujimoto, Wellness Program Manager at Castle Hospital, was on a TV program to explain this health hazard. He talked about dioxins and how bad they are for us.

He said that we should not be heating our food in the microwave using plastic containers.

This especially applies to foods that contain fat.

He said that the combination of fat, high heat, and plastics releases dioxin into the food and ultimately into the cells of the body.

Instead, he recommends using glass, such as Corning Ware, Pyrex or ceramic containers for heating food. You get the same results, only without the dioxin . So such things as TV dinners, instant ramen and soups, etc. should be removed from the container and heated in something else. This isn't bad but you don't know what is in the paper. It's just safer to use tempered glass, Corning Ware, etc.

He reminded us that a while ago some of the fast food restaurants moved away from the foam containers to paper. The dioxin problem is one of the reasons.

Also, he pointed out that plastic wrap, such as Saran, is just as dangerous when placed over foods to be cooked in the microwave. As the food is nuked, the high heat causes poisonous toxins to actually melt out of the plastic wrap and drip into the food.

Cover food with a (Tissue) paper towel instead.

This is an article that should be sent to anyone important in your life!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எண்கண் கோயில்

தமிழகத்தில் முருகப் பெருமான் கோயில் கொண்டிருக்கும் திருத்தலங்கள் பல இருக்கின்றன. இவற்றுள் தஞ்சை மாவட்டத்திலுள்ள சிக்கல், எட்டுக்குடி, எண்கண் ஆகிய மூன்று தலங்களில் அமைந்துள்ள ஆறுமுகப் பெருமான் திருக்கோயில்கள் மூன்றும் ஒவ்வொரு விதத்தில் சிறந்ததாகக் கருதப்படுகின்றன. இதற்கு காரணம்– இம்மூன்று கோயிலிலும் எழுந்தருளியுள்ள முருகக்கடவுளின் சிலா மூர்த்தங்கள் மூன்றும் ஒரே சிற்பியினால் வடிக்கப்பட்ட அழகான கலைக் கருவூலங்களாகும். இவற்றுள் 'எண்கண்' என்ற தலத்தின் ஆறுமுருகனது மூர்த்தம் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.

இத்தலத்தில் கோயில் கொண்டு கருவறையில் வேலனாக வீற்றியிருக்கும் ஆறுமுகப் பெருமானின் பன்னிருகைகளிலும் வில், அம்பு, கத்தி, கேடயம் முதலிய பல ஆயுதங்களை ஏந்தி அபயமளிக்கும் கரங்களுடன் மயில் மீது அமர்ந்து காட்சி தந்து அருளும் அழகை, நேரில் பார்த்தால்தான் தெரியும். திருவாட்சியுடன் கூடிய நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த இந்த அழகிய மூர்த்தத்தின் பளுமுழுவதையும் ஆறுமுகன் வீற்றிருக்கும் மயிலின் சுமார் ஓர் அங்குலமே தடிமனான கால்கள் தாங்கி நிற்பது அதை உருவாக்கிய சிற்பியின் கைவினைத் திறனுக்கு ஒரு சான்றாகும்.

சிக்கல் திருத்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் சிங்காரவேலனை வடித்த சிற்பியின் கட்டைவிரலை, இத்தலத்தில் ஆட்சிபுரிந்த சிற்றரசன் அது போன்ற அழகான மற்றொரு மூர்த்தத்தை சிற்பி வடிக்காதிருக்கும் பொருட்டு, தானமாகக் கேட்டு வாங்கிக் கொண்டானாம்!

தொடர்ந்து, எட்டுக்குடி ஊரில் கோயில் கொண்டிருக்கும் முருகனது அழகான சிலா மூர்த்தத்தை, தான் கட்டைவிரலை இழந்திருந்தும் வடித்துத்தந்த இதே சிற்பியின் இருகண்களையும், அது போன்ற சிலா மூர்த்தத்தை வடிக்காமலிருக்க அப்பிராந்தியத்தை ஆண்ட முத்தரசசோழன் என்ற சிற்றரசன் தானமாகக் கேட்டுப் பெற்றுக் கொண்டானாம்!!

இவ்வாறு தன் கைவினைத் திறனுக்கு பலியாக தன் கட்டைவிரலையும், இருகண்களையும் இழந்த அந்தச் சிற்பி வெகுதூரம் நடந்து சென்று களைப்பினால் வன்னி மரங்களடர்ந்த காட்டில் உறங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஆறுமுகப் பெருமான் அந்தச் சிற்பியின் கனவில் தோன்றி, ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கருங்கல்லைக் காட்டி, தனது திருவுருவத்தை அதில் வடிக்கும்படி கூறி மறைந்தார்.

இதைத் தொடர்ந்து, அந்த சிற்பி ஓர் இளம் பெண்ணின் உதவியுடன் தன் எண்ணத்தையே கண்களாகப் பாவித்து ஆயுதங்கள் ஏந்திய பன்னிருகைகளுடன் மயில் மீது வீற்றிருக்கும் அந்த வடிவேலனது உருவத்தை, அக்கல்லில் வடித்தாராம். தன் திருவுருவத்தை அழகாக சிலை வடித்த அச்சிற்பிக்கு ஆறுமுகன் காட்சி தந்து அவரது கட்டைவிரலையும், இருகண்களையும் திரும்பக் கொடுத்து அவரை சித்தராக்கி ஆட்கொண்டார்!!! என எண்கண் தலப்புராணம் கூறுகிறது.

முருகக் கடவுளே கருங்கல்லைக் கொடுத்து வடிக்கப்பட்ட அந்த திருஉருவமே இன்றைக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமையான 'எண்கண்' திருக்கோயிலில் வடிவேலனாக மயில் மீது கருவறையில் வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறார்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு வழங்கிய பெயர்க் கல் (Plaque)



Awarded to

Mrs Leela Nagaratnam

In Appreciation Of The Services

Rendered To Our Alma Mater

Jaffna Hindu Ladies' College
Old girls Association
Colombo - Branch
2/12/2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு' (யா.இ.ம.க. ப.மாச. - கொழும்பு) இனால் வழங்கப்பட்ட வறிய மாணவர்க்கான நிதியில் இருந்து 2006ம் ஆண்டு செல்வி. சாம்பவி சிவரூபன் தரம் - 2பி, செல்வி. சிலக்ஷா புண்ணியமூர்த்தி தரம் - 5சி ஆகிய இரு மாணவர்களுக்கு தனித்தனியே மாதம்மாதம் 350 ரூபாபடி யாழ்ப்பாணம் ஹற்றன் நசனல் வங்கியில் வைப்புச் செய்துள்ளார்கள்.

'யா.இ.ம.க. ப.மா.ச.-கொழும்பு' இன் உதவியினால் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் ('யா.இ.ம.ஆ.பா'இல்) கல்வி கற்கும் சிறார்கள் ஊக்கத்துடனும், செயற்திறனுடனும், செயற்படுகின்றார்கள் என்பதை எங்களுக்கு தாழ்மையுடன் அறியத்தருவதாக அப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவர் திருமதி. சுபாங்கினி சுஜீவன் எழுதியுள்ளார். மாணவர்கள் வெற்றியீட்டிய விபரத்தை தங்களின் இணையத்தளத்திலும், வருடஇதழிலும் பிரசுரிக்குமாறு வேண்டிக் கொள்ளுகின்றார்.

'யா.இ.ம.ஆ.பா' மாணவர்கள் வெற்றியீட்டிய விபரம் :-

2005ம் ஆண்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபை சுற்றாடல் அமைச்சினால் தரம் - 1 தரம் - 12 வரை நடாத்திய திறந்த போட்டியில் யாழ்மாவட்டத்தில் ஆரம்ப பிரிவில் ஒரே ஒரு ஆரம்ப பாடசாலைக்காக 'யா.இ.ம.ஆ.பா'க்கு நாடகத்திற்காக 3ம் இடம் கிடைத்தது.

பாடசாலையின் சுற்றாடல் தொடர்பாகவும் கற்றல் கற்பித்தல் சார்பாகவும் ஜெய்க்காத் திட்டத்தினால் 9 பாடசாலைகளில் 'யா.இ.ம.ஆ.பா.'க்கு 3ம் இடம் கிடைக்கப் பெற்றது. இதற்காக 2000 ரூபா பணப்பரிசும் கிடைக்கப் பெற்றது. பாடசாலைகளில் பூந்தோட்டத்திற்கு பூவலை செய்தார்கள்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி நடாத்திய அழகெழல் போட்டி 2006இல் யா.இ.ம.ஆ.பா. வெற்றியீட்டியவை வருமாறு :-

| | | | |
|---|---|---|---|
| 1. | குழு நடனம் (பாரதியார் பாடல்) | 1ம் இடம் - 2000 | ரூபா |
| 2. | இசையும் அசையும் | 2ம் இடம் - 1500 | ரூபா |
| 3. | சிறுவர் நாடகம் (புத்திமான் பலவான்) | 2ம் இடம் - 1500 | ரூபா |
| | மொத்தம் | 5000 | ரூபா |

5000 ரூபா பெற்றார்கள். அதற்கு நாட்டியத்திற்கு தேவையான அரங்கமும், காற்சிலம்பும் கொள்வனவு செய்தார்கள்.

2005இல் அழகெழல் போட்டி

| | | | |
|---|---|---|---|
| 1. | கிராமிய நடனம் (உழவர் நடனம்) | 1ம் இடம் - 2000 | ரூபா |
| 2. | சிறுவர் நாடகம் (ஒற்றுமையே பலம்) | 1ம் இடம் - 2000 | ரூபா |
| 3. | இசையும் அசையும் குழு | 2ம் இடம் - 1500 | ரூபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005இல் உலக சுற்றாடல் தினம் திறந்த போட்டி நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| மாவட்ட மட்டம் நாடகம் | 1ம் இடம் | - 10,000 ரூபா |
| தேசிய மட்டம் நாடகம் | 2ம் இடம் | - 15,000 ரூபா |

2005இல் அழகெழல் போட்டி

| | | | |
|---|---|---|---|
| 1. | கிராமிய நடனம் (குரவன் குரத்தி) | 1ம் இடம் | - 3000 ரூபா |
| 2. | இசையும் அசையும் (மீனவர் நடனம்) | 1ம் இடம் | - 3000 ரூபா |

மொத்தமாக பணப்பரிசாக – 36,500 ரூபா கிடைத்தது.

| | |
|---|---|
| அதற்கு ஜெமகா P.S.R ஒகன் கொள்வனவு செய்தார்கள் | - 50,000 ரூபா |
| வரி | - 7,612 ரூபா |
| மொத்தம் | - 58 362 ரூபா |
| பணப்பரிசு | - 36,500 ரூபா |
| பழைய மாணவர் சங்கம் ஈடு செய்தது | - 21,862 ரூபா |

2005இல் தேசிய மட்டம் தனிநடனம் செல்வி. ஸ்ரீதரா வரதராஜா க்கு கிடைத்தது.

2005இல் ஆங்கில நாடகம் மாவட்ட மட்டத்தில் 2ம் இடம் கிடைத்தது.

புலமை பரிசில் பரீட்சை விபரம் வருமாறு

| ஆண்டுகள் | விண்ணப்பித்தோர் | பரீட்சைக்கு தோற்றியோர் | சித்தியடைந்தோர் | உதவு தொகை பெற்றோர் |
|---|---|---|---|---|
| 2004 | 102 | 100 | 36 | 25 |
| 2005 | 134 | 134 | 48 | 33 |
| 2006 | 94 | 89 | 25 | 17 |

தோற்றிய அனைத்து மாணவர்களும் 50 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார்கள்.

2007-08-24 அன்று வரலட்சுமி விரதமான வெள்ளிக் கிழமை 'யா.இ.ம.ஆ.பா.'யில் அழகிய சரஸ்வதி சிலை அமைத்து, திறந்து வைத்தார்கள். இதனை பழைய மாணவ சங்க நிதியிலிருந்து ஒதுக்கிக் கொண்டார்கள்.

யா.இ.ம.ஆ.பா. அதிபரினதும் ஆசிரியர்களினதும் விடாமுயற்சியாலும், கடின உழைப்பாலும், செயல்திறன் மிக்க மாணவச் செல்வங்களினாலும் பணப்பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

**கண்ணீர் அஞ்சலி** - 'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - யாழ்ப்பாணம்' முன்னாள் தலைவி திருமதி திலகவதி யோகநாதனின் அருமைக் கணவர் வைத்தியக் கலாநிதி வேலுப்பிள்ளை யோகநாதன் அவர்கள் 05.10.2007 அன்று லண்டனில் காலமானார். அன்னாரின் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் 'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு' உறுப்பினர்கள் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியமணி

# திருமதி பத்மா சோமகாந்தன்

சின்னஞ்சிறு சிட்டுக்குருவி போல் இருந்த பத்மா அப்போதே இலக்கிய உலகில் உயர உயரப் பறக்க எத்தனித்துக் கொண்டிருந்தார். அந்தச் சின்னஞ்சிறிய சிட்டுக்குருவி இப்போது விண்வெளியில் பறக்கும் வானூர்தியாகிவிட்டது. இது இவருடைய ஆர்வத்திற்கும், முயற்சிக்கும் கிடைத்த பரிசு எனலாம். ஆம் இவர் எழுத்துலகில் பொன்விழா கண்டுவிட்டார். இவரை பாராட்டுகின்றோம்.

பத்மாவின் தந்தையார் பஞ்சநதேஸ்வரக் குருக்கள், தாயார் அமிர்தம்மா, இவர் கணவர் பிரபல எழுத்தாளர் நா. சோமகாந்தன் ஆவர். இவர் தமது மாணவப் பருவத்திலேயே வீரகேசரி மாணவர் பகுதியில் சிறு கட்டுரைகள், பாட்டுகள் என எழுதத் தொடங்கி விட்டார்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சாதிக்கட்டுப்பாடு வலிமை பெற்றிருந்தது. குறைந்த சாதியில் பிறந்த சிலர் தமது முன்னேற்றத்துக்கான தடைகளை தாண்டி வளர்ந்து சமூகத்தில் மிகவும் மதிக்கப்படத்தக்கவர்களாக உயர்ந்து நிற்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்வதை காண்கிறோம் உண்மைதான். பெருமைப்படக் கூடிய சாதனைதான்.

அதேபோல் உயர்சாதியில் பிறந்த ஒருவர் தமக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்துக் கொண்டு கீழெ இறங்கிவந்து சாதிக் கொடுமைகள் பற்றியும், பிற சீர்திருத்தக் கருத்துக்கள் பற்றி சிறுகதைகள் எழுதியதும் ஒரு சாதனைதான். இளம்பெண்ணான பத்மா இந்தச் சாதனையைச் செய்திருக்கிறார். பின்னால் தமது கணவருடன் சேர்ந்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கிய உறுப்பினராக நின்று உழைத்ததும் இவருடைய இயல்பைக் காட்டிநிற்கின்றன.

1950களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 'சிறுகதை அரங்கம்' என்ற புதுமையான ஒரு நிகழ்ச்சியை நடத்தியது. அந்த அரங்கத்தில் நல்ல சிறுகதை எழுத்தாளர்களாகக் கணிக்கப் பெற்ற ஐந்துபேர்களில் ஒருவராக பத்மாவும் திகழ்ந்தார். 1951ல் இலங்கையில் முதன்முறையாக சுதந்திரன் பத்திரிகை நடத்திய சிறுகதை போட்டியில் முதற் பரிசைப் பெற்று ஈழத்து இலக்கிய உலகையே தம்பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தார் பத்மா!

எழுத்துத்துறையில் மட்டுமன்றி கூட்டங்களில் உரையாற்றுவதிலும், இவர் தமது திறமையை வளர்த்துக் கொண்டார். இவருடைய பேச்சுக்களில் நல்ல தெளிவும், கருத்துக்களும் சபையோரை நன்கு கவரக்கூடியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்கும். குரல்வளம் இவருக்கு இயல்பாகவே அமைந்திருக்கிறது.

சென்ற ஆண்டு (2004) இலக்கியத் தம்பதிகளாக இவர்கள் இருவரும் கனடா உதயன் பத்திரிகையின் ஆண்டு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக இலங்கையில் இருந்து அழைக்கப்பட்டிருந்தனர். அங்கே இவர்கள் தங்கியிருந்த சிலமாதங்கள் ஓய்வு ஒழிச்சலின்றி பத்மா பல கூட்டங்களில் உரையாற்றினார். சில கருத்தரங்குகளில் வளப்பகிர்வாளராகவும், கலை இலக்கிய நிகழ்ச்சிகளில் சிறப்பு விருந்தினராகவும், பிரதம விருந்தினராகவும் கலந்து கொண்டார். இவருக்கு மக்களின் பாராட்டுகளும், பரிசுகளும் குவிந்தன. அங்குள்ள பல ஊடகங்களும் இவருடைய நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

கனடாவில் மட்டுமன்றி இந்தியாவிலும் இவருக்கு பரிசுகளும், பாராட்டுகளும், விருதுகளும் கிடைத்திருக்கின்றன. இவருடைய 'கடவுளின் பூக்கள்' என்ற நூலுக்கு கோயம்புத்தூர் 'லில்லி தேவசிகாமணி அறக்கட்டளையின்' பரிசு கிடைத்திருக்கிறது. 'புதிய வார்ப்புகள்' சிறுகதைத் தொகுதி தென்ஆசிய நாடுகள் ஒத்துழைப்பு கூட்டங்கள் மகளிர் பிரிவின் பரிசைப் பெற்றது. 'வேள்வி மலர்கள்' என்ற சிறுகதைத் தொகுதி இந்தியாவின் முன்னணி நாளிதழான 'இந்து' பத்திரிகையின் சிறந்த பாராட்டைப் பெற்றிருக்கிறது.

இவர் எழுதி 2002ல் வெளிவந்த 'ஈழத்து மாண்புறு மகளிர்' என்ற நூல் வட–கிழக்கு மாகாண சபையின் சாகித்திய பரிசை பெற்றுள்ளது. உலகப்புகழ் பெற்ற சுவாமி சின்மயானந்தாவின் வாழ்க்கை வரலாறை முதன்முதலாகத் தமிழில் எழுதிய பெருமையும் பத்மாவுக்கே உண்டு.

பத்மா பாடசாலை ஆசிரியையாகத் தமது தொழிலை ஆரம்பித்து, முதலாம் தர அதிபராகப் பணிபுரிந்து, உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்ந்து இப்போது ஓய்வுபெற்றிருக்கிறார். இவர் சிறுவர்களுக்காக பல ஆக்கங்களை அவ்வப்போது ஊடகங்கள் மூலம் வெளிக்கொணர்ந்திருக்கிறார். சிறுவர் இலக்கியமான 'அனுமான் கதை' இவரால் வெளியிடப்பட்டது.

தற்சமயம் உலகெங்கும் பரவிவாழும் தமிழ்மக்களின் பிள்ளைகள், தமிழ்ப் பண்பாட்டையும், சமயநெறிகளையுமாவது தெரிந்திருக்க வேண்டுமென்று கருதிய பத்மா அவர்களுக்காக, 'The Stories from Hindu Mytholoy' என்ற நூலை சிறுவர்கள் வாசிக்கக்கூடிய ஆங்கில மொழியில் ஆக்கியிருக்கிறார். இதனை கொழும்பு இந்து மகளிர் மன்றம் வண்ணப்படங்களுடன் மிக அழகிய பதிப்பாக வெளியிட்டிருக்கிறது.

மகளிர் முன்னேற்றம் குறித்த இலக்கியங்கள் இவரின் முக்கிய கண் ஆகும். 'பெண்ணின் குரல்' என்ற சஞ்சிகைக்கு இவரே ஆசிரியராக இருந்து நடத்தி வருகிறார். ஊடகத்துறையில் கடமையாற்றும் பெண்களின் நலங்களைக் கவனிப்பதற்காக இயங்கிவரும் 'ஊடறு' என்ற அமைப்புக்கு தலைமை தாங்கி வழிநடத்திச் செல்வதும் இவரின் பெருமைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மாவின் ஆக்கங்களை ஆய்வு செய்து நான்கு பல்கலைக் கழக மாணவர்கள் தமது பீ. ஏ. பட்டங்களை பெற்றிருப்பதும் ஒரு முக்கியமான விடயம். தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளரும், ஊடகவியளாருமான மாலன் 2005ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மூன்று பெண் எழுத்தாளர்களை கௌரவித்தார். அவர்களில் இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர் திருமதி. பத்மா சோமகாந்தனும் ஒருவர். இவ்விழா சென்னை மயிலாப்பூர் பாரதி வித்யாபவனில் இவ்வாண்டு மார்ச் மாதம் 23ந் திகதி பிரபல நாவலாசிரியர் பொன்னீலன், திலகவதி I.P.S, செ.கணேஷலிங்கன், பொ. செயப்பிரகாசம் என பல எழுத்தாளர்களின் பாராட்டுரைகளோடு நடைபெற்றது. பாரதி ஆய்வாளர் அறிஞர் பெ. சு. மணி அவர்கள் இவருக்கு விருதளித்துக் கௌரவித்தார்.

இவரின் இலக்கியப் பொன்னாண்டையொட்டி அண்மையில் நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் பெருவிழா எடுத்து "இலக்கியக் கலா வித்தகி" எனும் பட்டத்தை அளித்துக் கௌரவித்தது.

எமது சங்கத்தின் சஞ்சிகையான 'யாழ் நாதம்' முதலில் வெளிவர உழைத்தவருள் இவரும் ஒருவர். 'யாழ் நாதம்' என்னும் பெயரை இச் சஞ்சிகைக்கு பிரேரித்தவரும் இவரே. இவர் எமது கல்லூரியில் மாணவியாக இருந்த காலத்திலே "நூறு வருடங்களின் பின் இந்து மகளிர் கல்லூரி" எனும் தலைப்பில் சுதந்திரன் பத்திரிகையில் எழுதிய கட்டுரை அக்காலத்தின் அதிபர் ஆசிரியர்கள் மற்றும் பலராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது. கல்லூரியை விட்டுவிலகிய பின்னரும் தமது அதிபர்கள் மீது கொண்ட அபிமானத்தை வெளிப்படுத்தும் வகையில் திருமதி. மொட்வாணி, செல்வி. இராமநாதன் ஆகியோரைப்பற்றி புதிய தலைமுறையினர் அறிந்து கொள்ளும்வண்ணம் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதியமை பாராட்டுக்குரியது.

இவர் எமது கல்லூரியின் பழைய மாணவியென்பதோடு ஆசிரியராகவும் பணிபுரிந்து அதிபராகக் கடமையாற்றும் வாய்ப்பும் கிட்டியது. அதனை இவர் பயன்படுத்தவில்லை. தன் மகளின் சாதனையைக் கண்டு யாழ். இந்து மகளிர் கல்லூரி பெருமையடைகின்றது. அதனுடன் சேர்ந்து எங்கள் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமது இலக்கிய காலடிகளை உலகெங்கும் பதித்துவிட்ட இவருடைய எழுத்துலக வாழ்வின் பொன் விழாவைத் தொடர்ந்து இன்னும் பல இலக்கிய சாதனைகளைச் செய்து உயர உயரப் பறக்க வேண்டும் என்று மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு.
.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமான் வெற்றிவேலு சபாநாயகம் அவர்கள்

(சமாதான நீதவான் - முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம்)

திருநெல்வேலியில் வழிவழி வந்த சொலப்பரிய கற்றோர் குலத்தில் திரு. திருமதி. வெற்றிவேலு - இரத்தினம் தம்பதியினருக்கு 10-05-1935 அன்று ஸ்ரீமான் சபாநாயகம் அவர்கள் மகனாக பிறந்தார்.

இவர் ஆரம்ப காலத்தில் 1950களில் யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி கற்று வந்தபோது விவேகமான மாணவனாகவும், மாணவர் தலைவனாகவும் விளங்கினார். அத்துடன் கல்லூரியின் இந்து சமய விவகாரங்களில் முன்னின்று செயற்பட்டார். அதிபர்கள், ஆசிரியர்களால் மெச்சப்பட்ட மாணவர்களுள் ஒருவராவார். அத்தோடல்லாது பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பட்டதாரி, மற்றும் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இவற்றுடன் பல புலமைப் பரிசில்கள் பெற்று வெளிநாடுகளுக்கும் சென்று வந்தார்.

முதலில் வத்தேகம கிறைஸ்ட் சேர்ச் கல்லூரியில் ஆசிரியராக பதவி எற்றார். பின் அதே கல்லூரியில் உபஅதிபராக உயாந்தார். அதன் பின்னர் கண்டி வட்டாரக் கல்வி அதிகாரியாகவும், திருகோணமலை கல்வி அதிகாரியாகவும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை உபஅதிபராகவும், திருகோணமலை - யாழ்ப்பாணம் பிரதம கல்வி அதிகாரியாகவும், வவுனியா - யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளராகவும், கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளராகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் ஆகிய பதவிகளையும் வகித்து ஓய்வு பெற்றார். (இப்பெரியாருக்கு முன்னரும்-பின்னரும் இந்த பதவியை தமிழர் எவரும் வகிக்கவில்லை).

மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கும் ஆலோசகராக விளங்கினார். இதற்கு மேலாக மாணவ மாணவிகளின் கல்வி வளர்ச்சி இவர் தம் உயர் நோக்காகும். கல்வியும், தமிழும் இவரது உயிர் மூச்சாக விளங்கியது. “தேச மஹா” பட்டம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்ட பெருமைக்குரியவர். இவர் பெற்ற விருதுகள், சான்றிதழ்கள் பல.

**இவைகளைவிட தான் கல்வி கற்ற கல்லூரியின் சகோதர கல்லூரியான யாழ். இந்து மகளிர் கல்லூரியின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். அதன் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்து வைத்தவர். முக்கியமாக கணினி அறைக்கு குளிரூட்டி பொருத்துவதிலும் நூல்நிலையத்திற்குப் புத்தகங்கள் வழங்குவதிலும் எங்கள் சங்கத்திற்கு ஒத்தாசையாக இருந்தார்.**

பிறருக்கு வந்த இடையூறுகளை தனக்கு வந்ததாக கருதி அவற்றிற்கு நிவர்த்தி கண்டவர். தன்னைத் தேடி வருபவர்களுக்கு தயங்காது உதவி புரிவார். மிக எளிமையான வாழ்க்கையே வாழ்ந்து வந்தார். பலர் உள்ளங்களை கொள்ளை கொண்ட பண்பாளர். 02-08-2005 அன்று பிறருக்கு ஒளி கொடுத்த விளக்கு அணைந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A tale from Africa

This is a story from Malawi, a country in the African continent. This story is very much similar to the Aesopean fable where the fox invited the crane for supper which you must have read.

# Tortoise and the baboon

One evening when the tortoise was crawling slowly home, he met the baboon on his path.

"Hello, old fellow", said the baboon heartily. "Have you found much to eat today".

"No", replied the tortoise sadly. "Very little indeed".

"Follow me, poor old tortoise" the baboon told. "When you reach my home I will have food all ready for you". "Thank you. Thank you", said the tortoise, as the baboon turned round and bounced gaily along the path that led to his home.

Tortoise followed as fast as he could, which was very slow indeed, especially when he went uphill. Once or twice he stopped to rest. When the ground became so bumpy he got disheartened, but holding in his mind the picture of a wonderful feast, he plodded on.

At last he reached the place in the forest that the baboon called his home.

There he was, leaping about and grinning to himself, and as soon as he caught sight of the tortoise he said,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Bless my tail" what a long time you have taken to get here. I declare it must be tomorrow already!

"I'm so sorry said the tortoise puffing a little after his long journey. But I'm sure you have had plenty of time to get the supper ready, so do not grumble at me".

"Oh, yes indeed", replied the baboon, rubbing his hands together. "Supper is all ready. All you have to do is to climb up and get it. Look!" he said, pointing to the top of a tree. "Three pots of millet-beer, brewed especially for you".

The poor tortoise looked up at the pots which the baboon had wedged in the branches high above his head. He knew he could never reach them, and the baboon knew that too.

"Bring them down for me, there's a good friend' begged the tortoise, but the baboon climbed the tree in the twinkling of an eye and shouted down to him.

"Oh, no, anybody who wants to dine with me must climb up to get it".

So the poor tortoise could only begin his long homeward journey with a very empty stomach cursing at his inability to climb trees. But as he went home he worked out a splendid plan for getting his own back on the unkind baboon.

A few days later, the baboon had an invitation to eat with the tortoise. He was very surprised, but knowing how slow and good natured the tortoise was, the baboon said to himself.

"Oh well! The fellow evidently saw my joke but he bears me no malice. I'll go along and see what I can get out of him".

At the appointed time, the baboon set out along the track that led to

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the tortoise's home. Now, it was the dry season in the forest and many bush fires occur which leave the ground scorched and black.

Just beyond the river the baboon found a wide stretch of burnt and blackened grass over which he bounded towards the tortoise, who stood waiting beside a cooking pot from which wafted the most savory of smells.

"Ah, it is my friend the baboon!" said the tortoise "I'am very pleased to see you. But did your mother never teach you that you must wash your hands before meals? Just look at them! They are as black as soot".

The baboon scampered across the black earth and washed himself in the river, but when he came to the tortoise he found he had crossed the burnt ground again and arrived as dirty as before.

"That will never do! I told you that you could only eat with me if you were clean. Go back and wash again! And you had better be quick about it because I have started my meal already" said the tortoise, with his mouth full of food.

The poor baboon went back to the river again and again, but tried as he would, he got his hands and feet black each time he returned, and the tortoise refused to give him any of the delicious food that was fast disappearing. As the tortoise swallowed the last morsel, the baboon realized he had been tricked and with a cry of rage, he crossed the burnt ground for the 'last time and ran all the way home. "That will teach you a lesson, my friend", said the tortoise, smiling as he withdrew into his shell for a long night's sleep. (MG)

Courtesy: Daily News-Children-Page 18-Thursday-November 15, 2007

# A stitch in time saves nine

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் புலம் பெயர்வும் உழைப்பும்

*மலேசியாவில் 2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20, 21, 22 ஆம் திகதிகளில் நடைபெற்ற உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க மாநாட்டில் எங்கள் சங்க செயற்குழு உறுப்பினராகிய **திருமதி மிதிலர் ஸ்ரீ பத்மநாதன்** சமர்ப்பித்த கட்டுரை*

உலக நாடுகள் பலவற்றிலும் புலம்பெயரும் நிலைக்குத் தள்ளப்பட்ட தமிழர்கள் பல நாடுகளுக்கும் சென்று உழைத்தார்கள். தேயிலை, கோப்பி, இறப்பர், கரும்புத் தோட்டங்களில் வேலை செய்தனர். உலக நாடுகள் எல்லாம் வளமடையக் காரணமாக இருந்ததுடன் பண்பாடு, கலை இவற்றை மண்ணின் மணம் மாறாமல் காப்பாற்றி வருகிறார்கள் உலக நாடுகளில் தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ்கிறார்கள் என்று முடிகிறது கட்டுரை.

மீன்கொடியும், விற்கொடியும், புலிக்கொடியும் பறக்க ஆண்டது தமிழ் இனம். உலகில் இன்று வலிமை வாய்ந்த இனங்களாக விளங்கும் பல இனங்கள் நாகரிகம் அறியாத இனங்களாக வாழ்ந்த காலத்தில் தமிழ் இனம் பண்பாட்டு முதிர்ச்சியோடும், வாழ்வியல் வளர்ச்சியோடும் செழுமையோடும் வாழ்ந்த இனம். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த குடிகள் தோன்றிய மண்ணைவிட்டுப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு காலகட்டங்களில் புலம் பெயரும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

தமிழர்கள் பிரிட்டிஷ் காலனித்துவ ஆதிக்கத்திற்குக் கீழ் நூற்று ஐம்பது, இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே புலம் பெயர்ந்துள்ளார்கள். ஆனால் புலம் பெயர்தல் என்ற சொல் ஈழத் தமிழர் 1980 களில் புலம் பெயரத் தொடங்கிய பின்பே வழக்காற்றில் வந்தது. புலம்பெயர்ந்த தமிழர் எனும் போது உலகத் தமிழர் எல்லோருமே இதில் அடங்குவர்.

1802இல் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்திற்குக் கீழ் இருந்த போது உழைப்பிற்குப் பெயர்போன நமது தமிழர்கள் மலேசியா, சிங்கப்பூர், ஜமாஸ்கா, பிஜீ, கயானா, ரியூனியன், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். சுதந்திரத்திற்காகப் போராடிய தமிழர்களைத் தண்டிக்க பிரிட்டிஷ் அரசு தமிழர்களை நாடு கடத்தியது. தமிழர்கள் கூலிகளாக்கப்பட்டனர். கொத்தடிமைகளாக்கப்பட்டனர். மலேசியா, சிங்கப்பூர், பினாங்கு தீவுகள் செய்சேல்ஸ், மாரீசியஸ் ஆகிய நாடுகளைச் சீர்படுத்துவதற்காக கொத்தடிமைகளாக உழைத்தனர். தமிழர்களின் உழைப்பைக் கண்டு வியந்த பிரிட்டிஷார் தமிழர்களைக் கப்பல் கப்பலாக ஏற்றி வந்தனர். மலேசியாவும் பினாங்கும் உல்லாச புரியாக மாறின. மிகக் குறைந்த கூலிக்கு அபாரமான உழைப்பைத் தந்த தமிழர்கள் இறப்பர் தோட்டங்களில் ஒப்பந்த தொழிலாளர்களாக வேலை பார்த்தனர். சுகாதாரக்கேடு, விடமுள், கொலரா ஆகியவற்றால் ஏராளமானோர் இறந்தனர். குறிப்பாக பாடாங்ரங்காஸ் டனல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இடத்தில் மலையை குடைந்து ரயில் பாதை அமைக்கும் முயற்சியில் மாத்திரம் 2800 தமிழர்கள் இறந்தனர்.

விவசாயம் என்றால் என்னவென்று சரிவர அறிந்திராத நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் அந்த நாடுகளைப் பசுமை செழித்தோங்கும் வளமான பூமியாக மாற்ற தங்கள் செங்குருதியை வியர்வையாகச் சிந்தி உழைத்தனர்.

1860 களில் ஆபிரிக்காவில் இருந்த புர்வீகக் குடிகளான கறுப்பின நீக்ரோக்களுக்குப் போதுமான விவசாய அறிவு இல்லாத காரணத்தால் நமது தமிழர்களின் விவசாய அனுபவத்தையும், உழைப்பையும் பயன்படுத்திக் கொள்ளவே பிரிட்டிஷ் அரசாங்கம் தமிழர்கள் உள்ளிட்ட இந்தியர்களைத் தென்னாபிரிக்காவுக்குக் கொண்டு சென்றது.

முக்கியமாகக் கரும்புத் தோட்டங்களில் தமிழர்கள் குடும்பம் குடும்பமாக வேலை செய்தனர். தமிழர்களின் அயராத உழைப்பால் மிகுதியாகக் கரும்பு உற்பத்தி பெருகிச் சர்க்கரை உற்பத்தியில் மிகப் பெரும் வளர்ச்சி கண்டது தென்னாபிரிக்கா. இதைப் போலவே தேயிலை, கோப்பித் தோட்டங்களிலும் தமிழர்கள் கூலிக்கு அமர்த்தப்பட்டனர். மேலும் உலகத் தங்கத்தில் 47 வீத தங்கம் தென்னாபிரிக்காவில் மட்டுமே கிடைத்தது. அத்தகைய தங்கத்தைத் தேடிக் கண்டெடுக்கும் தங்கச் சுரங்கங்களிலும் தமிழர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

அங்கே வேலைக்குச் சென்ற தமிழர்களை அடிமைகளாக ஒப்பந்த முறையில் வேலைக்கு அமர்த்தி மிகக் குறைந்த கூலி கொடுத்தனர். இவர்கள் பின்னாளில் தங்களுக்குள் தாங்களே சேமித்த பணத்தை முதலீடு செய்து ஏக்கராக நிலம் வாங்கிச் சொந்தமாக விவசாயம் செய்து படிப்படியாக வளர்ந்தனா. தென்னாபிரிக்காவில் ஆறு இலட்சம் அளவில் தமிழர்கள் வசிக்கின்றனர். அவர்கள் அன்று செய்த உழைப்பாலும், தியாகத்தாலும் இன்று தமிழர்கள் அனைவரும் நல்ல நிலையில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், உயர் கல்வி அதிகாரிகளாக தொழில் அதிபர்களாக, வியாபாரிகளாக, வங்கிகளிலும், தனியார் நிறுவனங்களிலும் உயர் பொறுப்பு வகிப்பவர்களாக இருக்கின்றனர். ஒரு சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் உள்ளனர். தமிழர்கள் வளர்ந்து விட்டார்கள். ஆனால் இரண்டு தலைமுறைகளாகத் தமிழ் அருகி விட்டதாக அறியப்படுகின்றது.

அதேபோல் மொரீசியஸ் நாட்டில் மொத்த மக்கள் தொகை 12 இலட்சம். இதில் 1 இலட்சம் தமிழரும் அடங்குவா. 1730 களில் பிரெஞ்சுக்காரரும், 1810 இன் பின் பிரித்தானியரும் மொரீசியஸைக் கைப்பற்றினர். ஏராளமான கப்பல்களில் நூற்றுக்கணக்கானோர் இந்தியாவில் இருந்து மொரீசியஸிற்குக் கொண்டு வரப்பட்டனர். முக்கியமாக மொரிஷீயஸில் கரும்புத் தோட்டங்களில் வேலை பார்க்கவே இத் தமிழர்கள் இறக்குமதி செய்யப்பட்டனர். தமிழர்களின் அயராத உழைப்பால் கரும்பு விளைச்சல் அமோகமாக அதிகரித்தது. மொரிஷியசில் வசிக்கும் மக்கள் ஆங்கிலம், பிரெஞ்சு கலந்த கிரியோல் மொழியைப் பேசி வருகின்றனர். தற்போதும், தமிழகத்தில் இருந்தும் ஈழத்தில் இருந்தும் மருத்துவர்களும், பொறியியலாளர்களும், தொழில்நுட்ப வல்லுநர்களும் வருகின்றனர். ஈழத் தமிழர்களின் வருகை தமிழ் வளர்ச்சிக்குப் புதிய வீச்சைக் கொடுத்துள்ளதாக அறிய முடிகிறது. காலப் போக்கில் மெல்ல மெல்ல தாங்கள் இழந்துவிட்ட அடையாளங்களை மீட்டெடுக்க மொழி மற்றும் சமயத்தினூடாகத் தங்கள் அடையாளங்களை அர்த்தப்படுத்திக் கொள்ள மொரீஸியஸ் தமிழர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

செசல்ஸ் ஆபிரிக்க கண்டத்தில் இருக்கும் நாடுகளிலேயே செல்வச் செழிப்பில் முதலிடம் வகிக்கும் நாடாகும் மொத்த சனத்தொகை 85,000 தான். அதில் 6,000 பேர் இந்தியர். அதில் 50 வீதத்திற்கு மேற்பட்டவர் தமிழர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்கொழிக்கும் இந்தச் செல்வ நாட்டில் தமிழர்கள் சிலரே வாழ்ந்தாலும் பலர் தொழில் நுட்பத் துறைகள், கல்வித் துறைகள், அரசுத் துறைகள் போன்றவற்றில் வேலை பார்க்கிறார்கள். சிலர் சூப்பர்மார்க்கெட் வைத்திருக்கிறார்கள். இந்த நாட்டில் வேலை இல்லாதவர்களே கிடையாது. ஈழத் தமிழர்கள் இங்கு வர ஆரம்பித்த பின்பு அவர்களின் தமிழ்ப்பற்று வியக்கும் அளவில் உள்ளதாக அறிய முடிகிறது.

அடுத்து அரபு நாடுகளான அபுதாபி, டுபாய், சார்ஸா, சவுதி அரேபியா, குவைத், ஓமான், கட்டார் போன்ற இடங்களில் வாழும் தமிழர்கள் அந்தந்த நாடுகளில் குறிப்பிடத் தக்க முக்கியபணிகளில் உள்ளனர். இவை போக எகிப்து, லிபியா, ஈரான், ஈராக், சிரியா, துருக்கி போன்றவற்றில் தங்களது இரத்தத்தை வேர்வையாக்கி உழைக்கின்றனர். 1974, 75 களின் பின்புதான் தமிழர்கள் அரபு நாடுகளுக்குச் செல்ல தொடங்கினார்கள்.

அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக அரபு நாடுகளில் கணனி மென்பொருள் தொழில்நுட்பமும், தகவல் தொடர்பும், இணையதள வளர்ச்சிகளும் பிரம்மாண்டமாக உள்ளதால் இவற்றில் தனித்தன்மை பெற்ற தமிழர்களைப் பயன்படுத்திக் கொள்ள ஆர்வம் காட்டினர். அரபு நாடுகளில் 10 வீதம் உயர் பதவிகளில் இருப்பவர்கள். நிறுவனங்களில், வங்கிகளில் எழுதுநர் வேலைகளில் பணியாற்றுபவர்கள் 20 சதவீதத்தினர் உள்ளனர். அதற்கு அடுத்ததாகக் கூலி வேலையாட்கள் எனப் பலதரப்பட்டவர்கள் இருக்கின்றனர்.

அரபு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்கள் மற்றைய உலக நாடுகளுக்குச் சென்றவர்களை விட அடிப்படை வித்தியாசம் உடையவர்கள். அரபு நாடுகளில் நிரந்தரமாகத் தங்கிக் குடியுரிமை பெற முடியாது. இங்கு செல்லும்போதே திரும்பும் திகதியும் தீர்மானிக்கப்பட்டுவிடும்.

உலகிலேயே தேயிலை உற்பத்தியில் இலங்கை முதலிடம் வகிக்கின்றது. தேயிலை மற்றும் இறப்பர், தேங்காய், ஏலக்காய், மற்றும் வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதியில்தான் இலங்கையின் பொருளாதாரமே தலை நிமிர்ந்து நிற்கின்றது. இத் தேயிலைத் தோட்டத்தில் வேலை பார்க்கும் சுமார் 10 இலட்சம் தமிழர்கள இந்திய வம்சாவளியினர் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் தமிழகத்திலிருந்து இலங்கைக்குப் புலம் பெயர்ந்தவர்களே. இன்றுவரை தேயிலைத் தோட்டங்களில பாடுபடும் உழைப்பாளிகளாக உள்ளனர்.

இவ்வாறு இந்தியாவில் இருந்து உலக நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் காலனித்துவ நாடுகளில் புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் தொழிலுக்காக உலக நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்கள் எனப் புலம் பெயர்ந்தமைக்கு பல்வேறு காரணங்கள் உண்டு. இயற்கை எழில் கொஞ்சும் ஈழத்தில் இருந்து யுத்தம் காரணமாகப் புலம் பெயர்வோர் தொகை அதிகரித்த வண்ணம் உள்ளன.

இலங்கையில் இருந்து 1980 க்கு முன் புலம் பெயர்ந்தவர்கள் உயர் கல்விக்காகவும், தொழிலுக்காகவும் புலம் பெயர்ந்தவர்கள். இவர்கள் ஆழ்ந்த கல்வியறிவு நல்ல உலக அறிவு திடகாத்திரமான கலாசார உணர்வுகள் என்பவற்றை உடையவர்களாக இருந்தார்கள்.

1980 க்குப் பின் ஈழத்தில் இருந்து புலம் பெயர்ந்தவர்களின் நிலை இதைவிடப் பெரிதும் வேறுபட்டது. உயர் கல்விக்காக, பொருளாதாரத் தேவைக்காக, சென்றவர்களை விட யுத்தத்தில் இருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் புலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ந்தவர்களே அதிகம். இவர்களில் பெரும் தொகையினர் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கே புலம் பெயர்ந்துள்ளனர். சிறிய தொகையினர் இந்தியாவிற்கும், ஏனையோர் (அன்றைய அளவாக) 5 இலட்சம் தமிழர்கள் வட-கிழக்கில் இருந்து புலம் பெயர்ந்துள்ளார்கள். ஈழத்தில் இருந்து புலம் பெயர்ந்தவர்கள் அபிவிருத்தி அடைந்த நாடுகளான கனடா, லண்டன், அவுஸ்திரேலியா, அமெரிக்கா. பிரான்ஸ், ஜெர்மனி, சுவிஸ், நியூஸிலாந்து. இத்தாலி, நோர்வே. டென்மார்க் ஆகிய நாடுகளில் பெரும் தொகையில் குடியேறி உள்ளனர். வேறு சில நாடுகளில் சிறிய அளவில் புலம் பெயர்ந்தவர்கள் உள்ளனர்.

பெரும்பாலானோர் கனடாவிற்குப் புலம் பெயர்ந்துள்ளனர். இங்கு ஒரு இலட்சத்து எழுபதாயிரம் தமிழர்கள் வாழ்கின்றார்களா. கனடாவில் வாழும் தமிழர்களில் மிகப் பெரும்பாலானோர் இலங்கையில் இருந்து சென்ற தமிழர்கள்தாம். தமது வாழ்க்கையை அங்கு அமைத்துக் கொண்ட தமிழர்கள் இன்று இங்கே தேர்தலில் கூடப் போட்டியிடுகின்றனர். கனடாவில் உள்ள டொரண்டோ நகரத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து இருபதாயிரம் தமிழர்கள் வாழ்கின்றார்கள். 1980இல் கூடுதலான அகதிகளை ஏற்றுக் கொண்ட நாடு என்பதற்கான நோபல் பரிசு கனடாவிற்குக் கிடைத்துள்ளது.

கனடாவில் உடல் உழைப்புக் கொண்ட தொழில்கள் பலவற்றைப் புலம் பெயர்ந்தவர்களே செய்கின்றார்கள். இங்கு உணவகங்களிலும், கேஸ் ஸ்டேஷன்களிலும், பெற்றோல் நிலையங்களிலும் தொழிற்சாலைகளிலும் பரவலாகத் தமிழர்கள் வேலை பார்க்கின்றார்களா. இது தவிர சிறு வியாபார நிறுவனங்கள் யாவும் தமிழர்களால் நடத்தப்படுகின்றன. தமிழர் உணவகங்கள் நிறைய உள்ளன.

பொருளாதார ரீதியில் அவர்கள் இப்போது நல்ல நிலையில் உள்ளதுடன் அடுத்த தலைமுறையினர் கல்வியிலும் சிறந்து விளங்குகின்றனர். இந்தியாவில் இருந்தும் இலங்கையில் இருந்தும் ஏராளமான தமிழர்கள் அவுஸ்திரேலியாவில் பரவலாக வசிக்கின்றனர். மற்றும் அவுஸ்திரேலியாவில் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்கள் கைதிகளாக அழைத்து வரப்பட்டனர். அப்போது அவுஸ்திரேலியாவில் உள்ள கரும்பு மற்றும் வாழைத் தோட்டங்களிலும், கரும்பு ஆலைகளிலும் கூலி வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

இன்றுள்ள நிலையில் தமிழர்கள் 95 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் உயர்ந்த பல பணிகளைச் செய்பவர்களாகத்தான் உள்ளனர் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், வழக்கறிஞர்களா, பேராசிரியர்களா, கணனி நிபுணர்கள், தகவல் தொழில்நுட்பவியலாளர்கள், விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் என உள்ளனர் இன்று அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழர்களில் 2/3 பங்கினர் இலங்கைத் தமிழர்கள். இங்குள்ள 99 வீத தமிழர்கள் சொந்த வீடு மற்றும் சொத்துள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கல்வி அறிவு இல்லாத தமிழாகளே அவுஸ்திரேலியாவில் கிடையாது என்று உறுதியாகக் கூற முடியும். அவுஸ்திரேலியாவில் கல்வி தொழில்திறமை போன்றவற்றைக் கணக்கிலெடுத்தே தங்களது நாட்டிற்குள் யாரையும் அனுமதிக்கிறார்கள். சட்டவிரோதமாக மிகச் சிலரே அவுஸ்திரேலியாவிற்குள் வந்தனர். அவர்களும் கல்வியிலும் தொழில் திறமையிலும் வெகுசீக்கிரமே தங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

அடுத்து பிரிட்டிஷ் இந்தியாவையும், இலங்கையையும் 150 ஆண்டுகள் தனது ஆளுகையின் கீழ் வைத்திருந்தது. அக்காலத்தில் இரு நாடுகளிலும் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதி படைத்தவர்கள் தங்களது மேற்படிப்பிற்காக லண்டன் வந்தனர். இதில் சிலர் லண்டனிலேயே நல்ல பணி பெற்றுத் தங்கி விட்டனர்.

லண்டனில் சுமார் 150,000 தமிழர்கள் வசிக்கின்றார்கள். இதில் மிகப் பெரும் பாலானோர் மருத்துவம் பொறியியல் வல்லுநர்கள், பேராசிரியர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் என நல்ல நிலையில் உள்ளனர். மிகப் பலரும் அரசாங்கப் பணியாளர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மற்றும் சட்ட விரோதமாக லண்டனுக்குப் புலம் பெயர்ந்தவர்களும் உள்ளனர்.

ஈழத்தில் இருந்து இருபதாண்டு காலமாகப் புலம் பெயரந்தவர்களில் பெரும்பாலானோர் நல்ல நிலையில் இருக்கின்றார்கள். புலம் பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வாழ்கின்றபோதும் அவர்களில் சிலரது வாழ்க்கைத் தரம் உயர்வானதாக இல்லை. அதிக வருமானம் பெறுபவர்களாக இருந்தாலும் அவர்களது வாழ்க்கை முறை, குடும்ப உறவு, குடும்பத்தவர்களுடன் செலவு செய்யும் நேரம், ஓய்வு நேரம், விளையாட்டு, சமூக நடவடிக்கைகள், சமூக அந்தஸ்து, சமூக அறிவு, பொது அறிவு, பொழுது போக்குகள் போன்ற பல்வேறுபட்ட காரணிகளின் அடிப்படையில் பார்க்கும் போது புலம் பெயர்ந்தவர்கள் சிலரது வாழ்க்கை முறையும், வாழ்க்கைத் தரமும் நிறைவானதாக இல்லை. மற்றும் நன்றாகப் படித்துப் பல்கலைக்கழகப் பட்டத்தினைப் பெற்ற பின் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்த இளைஞர்கள் சிலர் சாதாரண வேலைகளைச் செய்யும் நிலையிலேயே அங்கு தற்போதும் இருக்கின்றார்கள். ஏனெனில் அவர்கள் வெளிநாடு செல்வதற்கு வாங்கிய கடனை அடைக்க வேண்டும். ஊரில் உள்ள தமது குடும்பத்தவர்களுக்குப் பண உதவி செய்யவேண்டும் எனப் பல்வேறு தேவைகள் இருந்தன. அதனால் ஏதோ ஒரு தொழிலைச் செய்து பணம் சேர்த்தனர். ஒரு வேலையில் உழைத்த பணம் போதுமானதாக இல்லாத போது இரண்டு வேலைகள் செய்கின்றனர். இதனால் தமது தகுதிக்கேற்ற வேலையைத் தேடவோ அல்லது தகுதிக்கேற்ற வேலைக்குத் தம்மைத் தயார்படுத்தவோ நேரமற்றவர்களாக இருக்கின்றனர். சான்று ஜேர்மன், பிரான்ஸ் போன்றவற்றில் மொழி முக்கிய பிரச்சினையாக உள்ளது. புலம் பெயர்ந்த பெண்கள் பொருளாதார ரீதியாக ஓரளவு விருத்தி அடைந்து விட்டார்கள் என்றே கூறவேண்டும். உடை, நடை, பாவனைகளும் ஓரளவு மாறிவிட்டன. ஆனால் அறிவியல் ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் உயர்ந்ததாக அறிய முடியவில்லை. எல்லாவிதமான வளமும் கிடைத்தும் அதைப் புலம் பெயர்ந்த பெண்கள் தமது முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தத் தவறி விட்டார்கள். அது அவர்களின் மனோபாவத்தையே காட்டுகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்கள் கடல் கடந்து ஆயிரம் மைல்களைத் தாண்டி அந்நிய தேசத்தில் வசிக்கநேர்ந்த சூழ்நிலையிலும் அவர்கள் தமிழர்களாக இன்னும் தங்கள் அடையாளங்களைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மண்ணின் மணம் மாறாமல் பண்பாட்டுச் சீரழிவில் இருந்து முடிந்தவரை விலகி நின்று வாழ்கின்றார்கள். திருமண உறவில், குடும்ப அமைப்பில் மரபு ரீதியாகப் பின்பற்றி வரும் பண்பாடுகளும், கலாசாரப் பண்புகளும் எந்த நாட்டில் குடியேறியும் இவை தமிழர்களிடையே தொடர்கின்றன.

தமிழர்கள் எங்கெல்லாம் புலம் பெயர்ந்தார்களோ, அங்கெல்லாம் தமிழைப் பரப்பி வாழ்கின்றனர். தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், தமிழ் வானொலி, தமிழ்த் தொலைக்காட்சி எனத் தமிழில் ஆரம்பித்துள்ளனர். அத்துடன் கணினி விசைப் பலகை தமிழில் உருவாகியது. தமிழ் உலகமே பெற்றுக் கொண்ட சாதனை. ஈழத் தமிழர் புலம் பெயர்ந்த நாடுகள் அநேகமானவை பல் இனக் கலாசாரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிககும் நாடுகளான கனடா அமெரிக்கா, லண்டன், அவுஸ்திரேலியா போன்றவை. ஆகவே, தமிழர் தமது தனித்துவத்தைக் காப்பாற்றிக்கொள்ளத் தடை ஏதும் இல்லை. புலம் பெயர்ந்த தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் கல்வி, தெழில் மற்றும் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைந்த ஒரு நிலையில் இருக்கின்றனர் என்ற வகையில் தமது தனித்துவ அடையாளத்தினைப் பேணக் கூடியவர்களாக இருக்கின்றனர். தடையேதும் இல்லை. லண்டன, அமெரிக்கா, அவஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வார இறுதிநாட்களில் சங்கீத நடன அரங்கேற்றங்கள் நடைபெறுகின்றன. அவுஸ்திரேலியாவில் பெண் குழந்தைகள் பரதநாட்டியமோ, சங்கீதமோ கற்றுக் கொண்டே ஆகவேண்டும் என்று எழுதப்படாத நியதியுள்ளது. அதே அளவிற்குப் புலம் பெயர்ந்த தமிழர்கள் கலைகளைத் தமது கண்களாகப் பாதுகாப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே. ஈழத்தில் அதுவும் வடகிழக்கில் எந்தவித அரங்கேற்றங்களும் இடம் பெறுவது இல்லை எனக்கூறும் அளவிற்கு உள்ளது. அவர்கள் உயிருக்கும் அன்றாட வாழ்க்கைக்கும் போராட வேண்டி உள்ளது. கோவில்களில் பூசை திருவிழாக்கள் கூட முன்பு போல் ஒழுங்காக இல்லை. மற்றும் புலம் பெயர்ந்த நாடுகளில் லண்டன், கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா என அநேக நாடுகளில் கோயில்கள் அமைத்து திருவிழாக்கள் நடைபெறுவதுடன் கலை கலாசார நிகழ்ச்சிகள் அடிக்கடி நடத்தப்படுகின்றன.

கலை கலாசார நிகழ்ச்சிகள் அடிக்கடி நடத்தப்படுவதால் நமது கலாசாரம், நாகரிகம், குடும்ப உறவு, ஒழுக்கம் ஆகியவற்றைப் பிள்ளைகள் உணர்ந்து கொள்ள முடியும் என்று பெற்றோர்கள் எண்ணுகின்றார்கள். அத்துடன் தமிழ் உணர்வும், கலாசாரமும் தழைத்தோங்கவேண்டும் என்று எண்ணுகின்றார்கள். மற்றும் தமிழ்ச் சங்கங்கள், கம்பன் கழகம், பழைய மாணவர் சங்கங்கள் என ஒவ்வொரு ஊரின் பேரிலுமே பல அமைப்புகளை உருவாக்கி ஒன்று கூடுகின்றனர்.

பலநூறு ஆண்டுகளாகத் தமிழன் உலகம் முழுக்கத் தன் உழைப்பினை ஈந்து அந்தந்த நாடுகளின் கலை, இலக்கியப் பொருளாதார வளர்ச்சிக்குத் தூணாய் இருந்து வாழ்ந்து வருவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். ஒரு பக்கம் தம் உழைப்பைச் சிந்தி, பொருளாதார விடுதலை அடைந்தாலும் மறறொரு பக்கம் தமது கலாசாரம் மொழி வளத்தை இழந்து வருவதும் அதைக் காப்பாற்றப் பெரும் முயற்சி எடுத்து வருவதும் கண்கூடு. அவர்கள் சென்ற இடம் எல்லாம் தமிழைச் சிறக்க வைப்பதே தங்களது தலையாய பணியாகக் கொண்டுள்ளனர்.

நாம் இப்போது முதல் பரம்பரைப் புலம் பெயர்ந்த தமிழர்களையே பார்க்கின்றோம். இரண்டாம் மூன்றாம் தலைமுறைத் தமிழர்கள் தமிழ் தழைக்க வழி செய்வார்களா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஆழ்ந்து யோசனை செய்யும் எந்த உணர்வுள்ள தமிழனையும் இது பதைபதைப்புக்குள்ளாக்கும் என்பது நிச்சயம். புலம் பெயர்ந்தவர்களில் பலர் அந்தந்த நாடுகளில் மிகச் சிறந்த பிரஜைகளாக வாழ்ந்து பல்வேறு துறைகளில் பல சாதனைகளைச் செய்து தாம் வாழும் நாடுகளுக்கும் தாம் பிறந்த நாட்டிற்கும் இனத்திற்கும் மதிப்பினைத் தேடித் தருபவர்களாக இருக்கின்றனர்.

தமிழர்கள் இன்று உலக நாடுகளில் தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள் என்றே கூற வேண்டும்.

நன்றி வீரகேசரி வார வெளியீடு கதிர் 25.11.2007 பக்கம் 10
வீரகேசரி வார வெளியீடு கதிர் 02.12.2007 பக்கம் 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வின்போது இரத்மலானை இந்துக்கல்லூரி விடுதி மாணவர்கள் பாடிய பாடல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன

# அம்மா

## 1. தாய்ப் பாசம்

ஆண்: ஆலயங்கள் தேவையில்லை. ஆகமங்கள் தேவையில்லை. தாயின் இதயம் போதும். மனிதா! சஞ்சலம் ஏதுமில்லை. தாய் போன்ற தெய்வமும் இல்லை. தாயும் இன்றி ஜீவனும் இல்லை. தாயின் அன்பு கடனை திருப்பித் தந்தவர் யாருமில்லை.

(ஆலயங்கள்)

தூங்கும் வேளையில் பிள்ளை இருமினால் துள்ளி எழுந்த என் அம்மா. ஆவி பதறினேன். அழுது புலம்பினேன். இருக்கின்றாள் சும்மா. எங்கு சென்ற போதும் என்னைத் துணையாக அழைப்பாயே! சொர்க்க வாசல் போகும் போது தனியாகச் சென்றாயே! தலையாட்டு விதியின் கையின் விளையாட்டு பொம்மை ஆனேன். தாயின் ஞாபக அலைகள் வீசும் தனிமைத் தீவானேன்.

(ஆலயங்கள்)

பெண்: வெள்ளி நிலவுதான் தொலைவில் இருப்பினும் வெளிச்சம் பூமியில் வீசும். உலக உறவுதான் அறுந்த போதிலும் தொடரும் தாய்ப் பாசம் ஆவியாகும். தண்ணீர் மீண்டும் மழையால் பூமியில் நீண்டும். சோர்ந்த நேரம் மகனின் கனவில் துணையாய் தாய் முகம் தோன்றும். ஊராரை ஊட்டி வளர்த்தேன். ஊரே உன் உறவாய் மாறும். உன்னை தேடும் அன்னை வடிவில் என்னை நீ காண்பாய்.

(ஆலயங்கள்)

## 2. அம்மாவை வாங்க முடியுமா?

ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தா வாங்கலாம். அம்மாவை வாங்க முடியுமா? நீயும் அம்மாவை வாங்க முடியுமா? ஆயிரம் உறவு உன்னைத் தேடி வந்தே நின்றாலும் தாய்போலே தாங்க முடியுமா. உன்னையும் என்னையும் படைச்சதிங்கே யாருடா? தெய்வம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்குதின்ன தாயடா. . . .

(ஆசைப்பட்ட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினியாக் கிடந்தாலும் பிள்ளைக்கு பால் கொடுப்பா. பால் குடிக்கும் பிள்ளை முகம் பார்த்து பசி மறப்பா. இளவட்டம் ஆன பின்னும் எண்ணெய் தேய்ச்சு குளிக்க வைப்பா. உச்சி முதல் பாதம் வரை உச்சி கொட்டி மகிழ்ந்திடுவா. நெஞ்சிலே நடக்க வைப்பா. நிலாவைப் பிடிக்க வைப்பா. பிஞ்சு விரல் நகம் கடிப்பா. பிள்ளை எச்சி சோறு திம்பா. பல்லு முளைக்க நெல்லு முளையால் மெல்ல மெல்ல தான் கீறிவிடுவா.

(உன்னையும்)

சூரியனை சுற்றிக்கிட்டு தன்னைச் சுற்றும் பூமியடா பெற்றெடுத்த பிள்ளையைச் சுற்றிப் பித்துக் கொள்ளும் தாய்மையடா. கர்ப்பத்தில் நெளிந்த உன்னை நுட்பமாய் தொட்டு ரசிப்பா. பேதைபோல் அவள் இருப்பா. மேதையாய் உன்னை வளர்ப்பாள். என்ன வேண்டும் இனி உனக்கு? அன்னை மடியில் சொர்க்கம் இருக்கு.

(உன்னையும்)

# 3. ஸ்ரீரங்கநாதனுக்கு தங்கச்சி

ஸ்ரீரங்கநாதனுக்கு தங்கச்சியம்மா. நான் தங்கச்சியம்மா. அந்த மாநகர் மதுரையின் மீனாட்சியம்மா. காஞ்சி காமாட்சியம்மா. நான் சிரித்தால் முத்துக்களும் முல்லைகளும் சிந்துதே அம்மா. அடி அன்னபூரணி. உனக்கு அன்னமூட்டவா? வெறும் சின்ன குழந்தை போல் கையால் தூழி ஆட்டவா?

(ஸ்ரீரங்க)

மறுபத்தில் ஓம்சக்தி சங்காலே பாலூட்டி நான் உன்னை வளர்த்தேன் அம்மா! சமயபுர மகமாயி சேலையிலே தொட்டில் கட்டி தாலாட்டுப் படித்தேன் அம்மா! தில்லை சிவகாமி குங்குமமாக்கி வைத்தேனே! திருக்கடவூர் அபிராமி பூவாலே செடி மிதித்தேனே! தேனாக கையாலே வாரி வாரி கொடுத்தேன் அம்மா! காஞ்சி புரத்திலே உனக்கு புடவை வாங்கினேன்! கருமாரியிடம் கழுத்து மணிகள் வாங்கினேன்!

(ஸ்ரீரங்க)

(குறிப்பு பக்கம் 69)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mrs. Pathmavathy Jeyaseelan

Pathmavathy or Pathma (photo back inner cover) as she was generally known is the second child and eldest daughter of late Mr. & Mrs. Aiyadurai of Neeraviady, Jaffna. She had her early education at Vembadi Girls' High School and at Ramanathan College, Chunnakam. After her Senior Cambridge exam, which she passed with flying colours, her father Proctor Aiyadurai, knowing her love for Carnatic Music sent her to the Madras Music Academy to do Diploma in Carnatic Music, under Professor Sambamorthy. On completing her course she came back to Jaffna and joined the staff of Hindu Ladies' College, Jaffna. Later she joined Vannai Vaideswaran Vidyalaya as Music teacher. Having lost her mother at the tender age of ten, she was more a mother than a sister to her younger siblings. Very kind and compassionate. She showed her concern for her sisters and brothers until she breathed her last. While at Vembadi she was a good tennis player and excelled in other sports too.

In the U K she was occupied with day translations for Scotland Yard Police. When Tamil boys gave statements she translated the same in English for the police. She was very successful in this field and won the admiration of the superiors.

She was in short an embodiment of an ideal Hindu woman, a daughter, an affectionate and concerned sister, a dutiful wife and a loving mother and a dedicated teacher and later translator.

She leaves behind two daughters Yasotharai and Sumithirai. Her Husband Mr. K. Jayaseelan passed away in April 2007 and she followed him seven months after.

May the two attain moksha.
Aum Shanthi, Aum Shanthi, Aum Shanthi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுமணம் கமழும் காதற் கடிதங்கள்

காதலர் இருவர் கருத்தொருமித்து தம் உள்ளத்து நினைவுகளை கடித மூலம் பிறரறியா வண்ணம் பரஸ்பரம் வெளியிடுவர். ஆனால் இச் செய்திகளை அறிவுக்கு விருந்தாக வெளியிடுபவர்கள் புலவர்களாவர். அவர்களுள் வடமொழியிற் சிறந்த காளிதாச மகாகவியும், செந்தமிழில் இளங்கோவடிகளும் தாம் படைத்த முறையே 'சாகுந்தலம்', 'சிலப்பதிகாரம்' என்பனவற்றில் வெளிப்படுத்திய காதற்கடிதங்கள் மிகுந்த இலக்கியச் சுவையுள்ளனவாகும்.

இவ்விரு பெருங் காப்பியங்களிலும் கடிதமெழுதிய இருவரும் பெண்களாவர். இவர்களுள் சகுந்தலை என்னும் பெண் துஷ்யந்தன் என்ற வேந்தனை கானகத்தில் கண்டு காதல் வயப்பட்டாள்.

அந் நிலையை எவ்வாறு அரசனுக்குப் புலப்படுத்தலாமென்று ஆராய்கையில், தன் உயிர்த் தோழியின் ஆலோசனையை கேட்டாள் அதன்படி காதல் கடிதம் எழுதத் தொடங்கினார். இது அக்காதலிருவரும் சேர்ந்து பழகுவதற்கு முன் நிகழ்ந்தது.

சிலப்பதிகாரத்து மாதவியோ கோவலனோடு இன்புற்று வாழ்ந்து அவளைப் பிரிய நேர்ந்தபொழுது அப் பிரிவாற்றாமையால் அதனைப் புலப்படுத்துமுகமாக காதற்கடிதம் எழுதினாள். அக் கடிதங்கள் பாத்திரங்களுக்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளன. அக் கடிதங்களுள் சகுந்தலையின் கடிதம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டால் இவ்வாறு இருக்கும்.

"நின்னுடைய உள்ள நிலையறியேன் நின்பாலே
மன்னுடைய வேட்கை மலிவுற்ற என் உறுப்பை
காமன் இரவும் பகலும் கனற்றுகின்றான் ஏமவருளில்லாயிவன்"

அருளில்லாத அரசே! நின்பாற் கொண்ட காதலால் என் உடலை மன்மதன் இரவும் பகலும் எரிக்கின்றான். இந்நிலையில் உனது உள்ளத்தின் நிலை என்னதென்று அறிந்திலேன்"

என்பது இந்தப் பாடலின் பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி மாதவி கோவலனுக்கு எழுதிய கடிதத்தைப் பார்ப்போம்.

மன்னுயிரெல்லாம் மகிழ் துணை புணர்களும்
இன்னிளவேனில் இளவரசாளன்
அந்திப் போதகத்தரும்பிடா தோன்றிய
திங்கட் செல்வனும் செவ்வியனல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடை படுப்பினும்
தணந்த மாக்கள் தந்துணை மறப்பினும்
“நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூதன்றிஃதறிந்தீமின்”

“உலகிலுள்ள உயிர்களையெல்லாம் தாம் மகிழ்ந்துணையோடு புணர்விக்கும் இனிய இளவேனியாகிய வஸந்தனென்பான் இளவரசன், ஆதலால் ஒழுங்கு படச் செய்யான் அன்றி, அந்திப்பொழுதில் அரும்புகின்ற விரக விதானத்தின் மேலே வந்து தோன்றிய திங்களாகிய செல்வனும் பிறப்பில் கோட்டமுடையவன். ஆதலால் கூடினோர் இடையே சிறிது தாழ்ப்பிலும் பிரிந்தோர் மறப்பினும் மணமிக்க பூவாளிகளால் இன்பம் நுகரும் அவ்வுயிரைக் கொன்றொழிதல் அவருக்குப் புதிய காரியமன்று. அதனை அறியுங்கள்” இது இப்பாடலின் கருத்தாகும்.

சகுந்தலை எழுதிய கடிதம் கிளியின் வயிறு போன்ற பசுமை மிக்க மெல்லிய தாமரையினமாகும். அதில் அவள் தன் கை நகங்களையே எழுதுகோலாகக் கொண்டு எழுத்துக்களைப் பதித்தனள் எனலாம்.

தாமரையின் மெல்லிய இலைகளால் அவள் வெம்மை தணிய அப்பொழுது தோழியர் வீசிக் கொண்டிருந்ததால் தனக்கு சுலபமாகக் கிடைத்த அந்த இலையையே அவள் கடிதம் எழுதப் பயன்படுத்தியிருந்தாள். எழுதுகோல் தேடுவதற்கு அவகாசம் இன்மையால் கை நகங்களால் எழுதினாள்.

மாதவி கடிதம் எழுதப் பயன்படுத்திய முதிர்ந்த அழகிய தாழையின் வெண்ணிய இதழ் ஆகும்.

மாதவி காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்ததாலும், அப்பட்டினம் கடற்கரைக்கு அருகில் இருந்ததாலும் நெய்தல் நிலத்துக் கருப்பொருளாகிய தாழை மடலைக் கடிதமாகக் கொண்டாள்.

அந்த மடல் காய்ந்துலர்ந்தாலும் கெடாத தன்மையுடையது. எழுதுகோலாக மாதவி பூவரும்பின் முனையை உபயோகித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மை செம்பஞ்சின் குழம்பு.

இருவருள் சகுந்தலை ஆச்சிரமத்தில் வளர்ந்தவள் காதல் பற்றிய அனுபவம் அவளுக்குப் புதிது. எனவே மன்மதன் எரிக்கின்றான் என்று வெளிப்படையாகவே எழுதி விட்டாள்.

# சிந்தனைச் செல்வம்

தன் கருத்தை அப்படி வெளிப்படையாகச் சொல்லாவிட்டால் புதியவனாகிய வேந்தன் வேறு பொருள் கொண்டு விலகி விடக்கூடும் என்று அவள் நினைத்தாள். அதனால் விளக்கமாகக் கடிதம் எழுதினாள். தாமரையிலையில் அவள் கடிதம் எழுதியதும் காதலனாகிய வேந்தன் தாமதமில்லாது அவ்விடம் வந்ததால். அது வாடிவிடவில்லை.

இனி, மாதவி கணிகையர் குலத்தவள். அவள் கோவலனுக்கு கடிதம் எழுதியது அவனோடு கூடி வாழ்ந்த பின்னராகும். அந் நிலையில் தன் எண்ணத்தை குறிப்பாகப் புலப்படுத்தினாலும் அவன் புரிந்து கொள்வான் என்ற நம்பிக்கை அவளுக்கிருந்தது.

இளவரசராகிய வேனியானும், திங்கட் செல்வனும் தனக்கு நலஞ் செயமாட்டார்கள் என்று அவள் குறிப்பாக எழுதினாள்.

இவள் எழுதிய கடிதம் மலர் மாலையோடு இணைக்கப்பட்டு வசந்தமாலை என்னும் தோழி மூலம் அனுப்பப்பட்டது. சில நாட்கள் சென்றுதான் அது கோவலனைச் சென்றடையுமாதலால் நீண்ட காலம் வாடாதிருக்கும் தாழை மடலாக அமைந்தது. சகுந்தலை மாதவி ஆகியோரின் வாழ்க்கை நிலை, இயல்புகளுக்கேற்ப ஆசிரியர்கள் காதற் கடிதத்தை எழுதிய முறை வியக்கத்தக்கது.

காதல் வயப்பட்டோரில் எழுதுவோர், எழுதப்படுவோர் இயல்புகள், எழுதும் வாசகங்கள், கடிதத் தாள், எழுதும் கருவி, மை என்று எல்லா அம்சங்களையும் செவ்விய முறையில் சிந்தித்து நம்பத்தகுந்த விதத்தில் புலவர் பெருமக்கள் காதல் நறுமணம் கமழ இலக்கியம் படைத்துள்ளனர். அதனை முகர்ந்து நாமும் மகிழ்ச்சியடைகிறோம்.

*செல்வி சற்சொரூபவதி நாதன்*
*உபதலைவி, யா. இ. ம. க — ப. மா. ச .— கொழும்பு*

நன்றி—வீரகேசரி சங்கமம் 05.01.2008 பக்கம் 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு பதின்நான்காம் ஆண்டு (2007) அறிக்கை

(03-02-07 தொடக்கம் 02-02-2008 வரையும்)

சங்கத்தின் 13வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 2007ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 03ஆம் திகதி கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்திலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் தலைவி திருமதி பரமேஸ்வரி பாலசிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது.

14வது ஆண்டிற்கான செயற்குழு அங்கத்தவர்களாகப் பின்வருவோர் கடமையாற்றினர்.

| | |
|---|---|
| போஷகர்கள் | - திருமதி லீலா நாகரத்தினம் (17.02.07 வரையும்)<br>- திருமதி உமாராணி குமாரசுவாமி |
| தலைவி: | - திருமதி சிவகாமி அம்பலவாணர் |
| உபதலைவர்கள்: | - செல்வி சற்சொரூபவதி நாதன்<br>- திருமதி அபிராமி கயிலாசபிள்ளை<br>- திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் |
| பொதுச் செயலாளர்: | - திருமதி தயாநிதி செல்வநாயகம் (31.03.07 வரையும்)<br>- திருமதி கௌரி ரமணா (31.03.07இல் இருந்து) |
| உதவிச் செயலாளர்கள்: | - திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்<br>- திருமதி கௌரி ரமணா (31.03.07 வரையும்)<br>- திருமதி உஷா சிற்றம்பலநாதன் (31.03.07இல் இருந்து) |
| பொருளாளர்: | - செல்வி சிவமலர் சுப்பிரமணியம் |
| உதவிப் பொருளாளர்: | - திருமதி சர்வேஸ்வரி சிதம்பரநாதன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகக் குழு:
- திருமதி விமலா மணிவாசகன்
- செல்வி ஞானலட்சுமி பாலசிங்கம்
- திருமதி ருக்மணி அரசரத்தினம்
- திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன்
- திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன்
- திருமதி கமலா கணபதிப்பிள்ளை
- திருமதி கலைச்செல்வி நிரஞ்சன்
- திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்
- திருமதி நந்தினி மோகன்
- திருமதி கமலா கனகசபை
- திருமதி மல்லிகாதேவி சரவணபவான்
- திருமதி இந்திராணி சோமசுந்தரம்
- திருமதி கௌரி தேவசேனாதிபதி
- திருமதி திலகா விஜயரத்தினம்
- திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்
- திருமதி கமலருளேஸ்வரி சர்வானந்தா
- திருமதி மஞ்சுளா ஜீவலிங்கம்
- செல்வி வத்சலா நாகலிங்கம்
- திருமதி தயாநிதி உதயகுமார்
- திருமதி பொன்மலர் கந்தசாமி
- திருமதி சாரதாம்பாள் மனோகரன்
- திருமதி மகேஸ்வரி கணேசமூர்த்தி
- திருமதி புஷ்பகாந்தி சோதிலிங்கம்
- திருமதி சாவித்திரி உமாமகேஸ்வரன்
- திருமதி உஷா சிற்றம்பலநாதன் (31.03.07 வரையும்)
- திருமதி தயாநிதி செல்வநாயகம் (31.03.07இல் இருந்து)

5. கணக்குப் பரிசோதகர்: கணேஷலிங்கம் அன்ட் கொம்பனி, சார்ட்டட் அக்கவுண்டன்ஸ், 16 B Schofield Place, கொழும்பு 3.

6. யாழ் நாதம் ஆசிரியை: திருமதி விமலா மணிவாசகன்

7. உப குழுக்கள்:

| உறுப்புரிமைக்குழு | இலக்கிய கல்விக்குழு |
| --- | --- |
| திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன் | திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன் |
| திருமதி ருக்மணி அரசரட்ணம் | திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம் |
| திருமதி பொன்மலர் கந்தசாமி | திருமதி திலகா விஜயரத்தினம் |

இவ் வருடத்தில் நடத்திய முக்கிய நிகழ்வுகள்

1. சர்வதேச மகளிர் தின விழா: இத்தினத்தில் எமது பாடசாலையின் புகழ் பூத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவி திருமதி தயாநிதி செல்வநாயகம் கௌரவிக்கப்பட்டார். அன்றைய தினம் யாழ் நாதம் இதழ் 13 வெளியிடப்பட்டது.

2. நடுவருட மலிவு விற்பனை நடைபெற்றது.

3. திருமதி பரமேஸ்வரி பாலசிங்கத்தின் பிரியாவிடைத் தேநீர் விருந்து நடைபெற்றது.

4. வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இரத்மலானை இந்துக்கல்லூரி விடுதி மாணவர்களுடன் நடத்தப்பட்டது.

5. எம் கல்லூரியின் 2006 ஆம் ஆண்டுச் சிறந்த மாணவியாக கபிலினி அருட்செல்வனுக்குப் பொன்விருது வழங்கப்பட்டது.

6. கல்லூரி மேடைக்குத் தேவையான திரைச்சீலை அன்பளிக்கப்பட்டது.

7. எங்கள் சங்கம் ஸ்தாபித்த www.jhlc.lk எனற கல்லூரி இணையத்தளம் தொடர்ந்து நிர்வகிக்கப்படுகிறது.

8. யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி

9. யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி

சங்கத்தின் நடப்பு ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டங்கள்

| திகதி | இடம் | வரவு |
|---|---|---|
| 31.03.07 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி, கொழும்பு 4 | 13 |
| 12.05.07 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி, கொழும்பு 4 | 10 |
| 02.06.07 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி, கொழும்பு 4 | 9 |
| 07.07.07 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி, கொழும்பு 4 | 18 |
| 04.08.07 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி, கொழும்பு 4 | 9 |
| 01.09.07 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி, கொழும்பு 4 | 5 |
| 03.11.07 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி, கொழும்பு 4 | 7 |
| 01.12.07 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி, கொழும்பு 4 | 7 |
| 05.01.08 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி, கொழும்பு 4 | 6 |

ஏனைய நிகழ்வுகள்

எமது மதிப்பிற்குரிய ஆசிரியையும் எம் கல்லூரி ஓய்வுபெற்ற உப அதிபருமாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். திருமதி லீலா (அன்னபூரணம்) நாகரத்தினம் அவர்களின் ஆத்மசாந்தி வழிபாட்டிலும் மதிய போசன வைபவத்திலும் அன்னாரின் உறவினர்களுடன் கலந்து கொண்டோம். இந்த நிகழ்வை அவரின் பிள்ளைகளின் (திருமதி ஏ. சுதர்ஷிணி, திரு. என். சுரேஷ்குமார்) சார்பில் 2007ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிட்டி இல. 75, லோறன்ஸ் வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் மு.ப. 11.00 மணிக்கு ஒழுங்கு செய்தோம்.

1. சர்வதேச மகளிர் தின விழா:
இந்த நிகழ்வு விரிவாக இச் சஞ்சிகையின் 5ம் பக்கத்திலிருந்து 33ம் பக்கம் வரையும் உள்ளது. இந்நிகழ்வின் போது திருமதி தயாநிதி செல்வநாயகம் சிறந்த பெண்மணியாகக் கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து யாழ்நாதம் இதழ் 13 வெளியிடப்பட்டது.

2. நடுவருட மலிவு விற்பனை:
நடுவருட மலிவு விற்பனை ஜூலை மாதம் 1ம் திகதி காலை 10 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரைக்கும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் விற்பனைக்கு எங்கள் கல்லூரியின் புகழ்பூத்த மாணவியும் எங்கள் சங்க உபதலைவியுமான செல்வி சற்சொரூபவதி நாதன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். உபதலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை பிரதம அதிதியை வீட்டில் இருந்து மண்டபத்திற்கு அழைத்து வந்தார். சங்கத்தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணர் பிரதம அதிதிக்குப் பழத்தட்டுக் கொடுத்து வரவேற்றார். (படம் பின் அட்டை) பிரதம அதிதி நாடாவை வெட்டி நடுவருட மலிவு விற்பனையை ஆரம்பித்து வைத்தார். (படம் பின் அட்டை) பிரதம அதிதி மலிவு விற்பனையில் வைக்கப்பட்டிருந்த பொருட்களைப் பார்வையிட்டு சிலவற்றைக் கொள்வனவு செய்தார். (படம் பின் அட்டை) அத்துடன் எங்கள் சங்கத்திற்கு ரூபா 5,000 அன்பளிப்புச் செய்தார்.

இந்நிகழ்விற்கு எங்கள் சங்க உறுப்பினர்கள் பெருந்திரளாக வந்து எமக்கு உற்சாகமூட்டினர். வருகை தந்த அங்கத்தவர்கள் அட்டைப்படத்தில் காணப்படுகின்றனர்.

இதற்கு மேசை ஒன்றுக்கு 1,000 ரூபாவாகவும். கொடியொன்றுக்கு 500 ரூபாவாகவும் அறவிடப்பட்டது. இவ் விற்பனையில் மரக்கறிவகைகள், சிற்றுண்டிவகைகள், சுவைசரக்குகள், புடவைகள், படுக்கைவிரிப்புக்கள், அழகுசாதனங்கள், புத்தகங்கள், கைவேலைச் சாமான்கள் என்பன வைக்கப்பட்டிருந்தன. மலிவு விற்பனையில் எங்களுக்கு 40,000 ரூபா இலாபமாக கிடைத்தது.

3. திருமதி பரமேஸ்வரி பாலசிங்கத்தின் பிரியாவிடைத் தேநீர் விருந்து:
இவ்விருந்து உபசாரம் 07.07.2007 நடைபெற்றது. இவர் கனடாவில் குடியேறுவதற்குச் சென்றுவிட்டார்.

4. வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு:
ஒன்றுகூடல் நிகழ்வு இரத்மலானை இந்துக் கல்லூரி விடுதி மாணவர்களின் சக்தி இல்லத்தில் (இரத்மலானை இந்துக் கல்லூரி விடுதி 72 C/3, கந்தவளை வீதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.09.2007 அன்று நடைபெற்றது. இவ்வேளையில் விடுதி மாணவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளை செய்துகாட்டி மகிழ்வித்தார்கள். (குறிப்பு பக்கம் 61, படங்கள் பின்உள்அட்டை) இவ் ஒன்றுகூடல் நிகழ்வை திருமதி அபிராமி கயிலாசபிள்ளை ஒழுங்கு படுத்தியிருந்தார். ஒன்றுகூடல் நிகழ்வின் போது ரூபா 15,000 செலவிடப்பட்டது. இதில் 9,000 ரூபா அங்கத்தவர்களிடமிருந்தும் மிகுதி திருமதி அபிராமி கயிலாசபிள்ளையினாலும் செல்வி சிவமலர் சுப்பிரமணியத்தினாலும் செலவிடப்பட்டது.

5. சிறந்த மாணவிக்குப் பொன்விருது:

2006ம் ஆண்டுச் சிறந்த மாணவியான செல்வி கபிலினி அருட்செல்வனுக்கு 20,000 ரூபா பெறுமதியான பொன்விருது வழங்கப்பட்டது.

எமது கல்லூரியின் 2006ம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக நடாத்தப்பட முடியவில்லை. 2007ம் ஆண்டிலும் தொடர்ந்தும் சுமூகநிலை ஏற்படாததால் 2007ம் ஆண்டு பாடசாலை மட்டத்தில் இப்பரிசளிப்பு விழா எளிமையாக நடாத்த வேண்டியேற்பட்டது. இவ்விழாவின் போது எமது கல்லூரியின் 2005ம் ஆண்டிற்கான சிறந்த மாணவியான செல்வி பாமினி பரஞ்சோதிக்கு கல்லூரி அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் அவர்களால் எங்கள் சங்க அன்பளிப்பாகிய தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. அதற்கான புகைப்படம் பின் அட்டையில் உள்ளது.

6. கல்லூரி மேடைக்குத் திரைச்சீலை:

மேடைத்திரைச்சீலை எமது சங்கத்தினால் வாங்கி கல்லூரிக்கு அன்பளிக்கப்பட்டது. இதற்கான செலவு திரைச்சீலை விலை 224,160 ரூபா, Girder விலை 110,000 ரூபா, தையல்கூலி 51,000 ரூபா

7. www.jhlc.lk இணையத்தளம்

எங்கள் சங்கம் அமைத்த www.jhlc.lk என்ற இணையத்தளத்தை தொடர்ந்து நிர்வகித்து வருகிறோம். இந்த இணையத்தளம் உலகின் பல்வேறு இடங்களில் உள்ள கல்லூரிப் பழைய மாணவிகள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளவும் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும் உதவுகின்றது.

8. யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி:

2005, 2006ஆம் ஆண்டுகளில் உதவிப்பணம் பெற்ற 6 மாணவிகளே தொடர்ந்தும் 2007ஆம் ஆண்டிற்கான உதவிப்பணமாகிய ரூபா 500/- மாதம் தோறும் பெற்றார்கள். அவர்கள் பெயர்கள் பின்வருமாறு:

செல்வி பிரவீனா பரமேஸ்வரன் 9 டி
செல்வி தீபிகா ஸ்ரீஸ்கந்தராஜா 9 ஈ
செல்வி வஜிதா தவராசா 10 சி
செல்வி மயூரிகா வாசுதேவன் 12 கலை
செல்வி ரஜித்தா செல்வராசா 12 கலை
செல்வி மயூரதி குகனேஸ்வரன் 8 ஈ

தற்போதய கல்லூரி அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் 2006ஆம் ஆண்டு செய்தது போன்று 2007ஆம் ஆண்டும் ஒவ்வொரு மாதமும் இந்த மாணவிகள் உதவிப் பணம் பெற்றதற்கு அத்தாட்சியாக மாணவிகள் கையொப்பத்துடன் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம் எங்கள் சங்கத்திற்கு அனுப்பியது அவரது கடமை உணர்வை எடுத்துக் காட்டுகின்றது.

9. யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி

2006ஆம் ஆண்டுபோன்றே 2007ஆம் ஆண்டும் 2 மாணவிகள் ரூபா 350/- மாதம்தோறும் உதவிப்பணமாகப் பெற்றார்கள். அவர்கள் பெயர்கள் பின்வருமாறு:

செல்வி பிரவீனா நடராசா தரம் 2 பி	செல்வி. திலக்ஷனா பழனி தரம் 3 பி

எங்கள் சங்கம் வடகீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தில் (வ. கீ. பி. பா. ப. மா. சம்) ஒரு அங்கத்துவ சங்கமாக தொடர்ந்து இருக்கின்றது. எங்கள் சங்கத்தை இந்த ஆண்டு (2007) பின்வருவோர் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள்:

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
செல்வி சற்சொரூபவதி நாதன்
திருமதி சிவகாமி அம்பலவாணர்
திருமதி விமலா மணிவாசகன்
செல்வி சிவமலர் சுப்பிரமணியம்

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை சம்மேளனத்தின் பொருளாளராகவும் திருமதி சிவகாமி அம்பலவாணர் இணைச் செயலாளராகவும் செல்வி சற்சொரூபவதி நாதன் எங்கள் கல்லூரிப் பிரதிநிதியாகவும் கடமையாற்றினார்கள்.

எமது சங்கக் கூட்டங்களையும் ஏனைய நிகழ்வுகளையும் நடத்துவதற்கு இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவும் இந்து வித்தியா விருத்திச் சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக பரிசோதனை செய்து தரும் திரு. சச்சிதானந்தனுக்கும், இதை ஒழுங்கு செய்த திருமதி. பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

சங்க அலுவல்களில் எனக்கு உறுதுணையாக இருந்த எய்கள் சங்கத் தலைவி திருமதி சிவகாமி அம்பலவாணருக்கும், பொருளாளர் சிவமலர் சுப்பிரமணியத்துக்கும், நிர்வாகக்குழு அங்கத்தவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அள்றும், இன்றும், என்றும் எம்மைக் காக்கும் நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் அருளால் எங்கள் சங்கமும் கல்லூரியும் தொடர்ந்து யாழ் இந்து மாணவிகளை ஆற்றல் மிகு நங்கையராக ஆக்கவேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

*திருமதி கௌரி ரமணா*
*கௌரவ செயலாளர்*
*02.02.2008*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரத்மலான இந்துக் கல்லூரி விடுதி மாணவர்களுடன் இணைந்து நடத்தப்பட்ட ஒன்றுகூடல் நிகழ்வின் நிழல்கள் (குறிப்பு – பக்கங்கள் 69–70)**











திருமதி லீலா நாகரத்தினம்
(குறிப்பு – பக்கங்கள் 4, 34–39)



திருமதி பத்மாவதி ஜெயசீலன்
(குறிப்பு – பக்கம் 63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன் விருது பெறும் 2006 ஆம் ஆண்டுச் சிறந்த மாணவி
செல்வி பாமினி பரஞ்சோதி
(குறிப்பு – பக்கம் 71)

மலிவு விற்பனை நிகழ்வின் நிழல்கள்
(குறிப்பு – பக்கம் 70)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org